ௐ

புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது.

# இந்து சாதனம்.

(1889)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

['ரெலிபோன்' இல. 56.]

**பத்திரிக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: | " ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: | " ரூ. | 9.00 |
| தனிப்பிரதி: | | சதம் 1 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

உ

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச், சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப், பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாகமத்தத் தினிது தூங்கப், பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்தவறிவிச்சைதொழிலென்றோது, மதம்பூத்தவிநாயகன் றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ 10-0 |
| " | அரைக்கலம் | ரூ 5-0 |
| " | கால்கலம் | ரூ. 3 0 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றி கவனிக்கப்படா.

புத்தகம்—௪௪. } யாழ்ப்பாணம்; - ஆங்கிரசஸு ஆடிமீ ௨௭௨, (1932 ஆகஸ்ட் 11) வியாழக்கிழமை { இலக்கம்—௯

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும்,
ஆன்ற பெருமைதரும்"

## சிவானுக்கிரகம்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

விறகிற் பற்றியெரிகின்ற தீயைக்கண்டு அதன் வடிவமாகிய இத்தன்மையன வென்று உணரலாமன்றி, அவ்விறகில் அந்தர்க்கதமாக விளங்கும் அக்கினியைக் காணவல்லவர்களில்லை; பரம்பொருளாகிய சர்வேசுரன் அருவமாதலேயன்றி, ஆன்மகோடிகள் ஈடேறும்பொருட்டுச் சதாசிவன், மகேசுரன், உருத்திரன், விட்டுணு, பிரமன் முதலிய மூர்த்திகளாகித் திருவருள் புரிகின்றனர். அந்தக் கடவுள் பிரமன் முதலிய சீவகோடிகள் செய்த பாவங்கள் ஒழியும்படி அவரவர் குற்றங்களுக்கேற்பத் தண்டங்கள்செய்கின்றனர். இந்த நியாயத்தாலன்றோ அரசர் குற்றஞ் செய்த பிரசைகளைத் தண்டிக்கின்றனர். குற்றஞ் செய்தோரைத் தண்டித்தலால் அரசருக்குக் கொஞ்சமுங் குற்றமுண்டாகாது. பிதாவானவன் பிழையான காரியங்களைச்செய்த புதல்வரைத்தண்டிப்பது அவர்கள்பேரில் வைத்த அன்பினாலன்றி வேறன்று. அதுபோலவே கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் அவர்களுடைய பந்தங்களை அகற்றும்படி தண்டங்களைச் செய்து தன் கிருபாநோக்கத்தைச் செலுத்துகிறார்; துன்புறுத்துகின்ற கட்டி முதலிய நோயுற்றவனுக்கு அந்தப் பாகத்தை அரிந்தாவது சுட்டாவது வைத்தியன் ஒழிப்பதுபோலத் தயாமூர்த்தியாகிய சங்கரன் ஆன்மாக்களுடையவினையொழியும்படி வருத்தப்படுத்தி, பின்னர் அவ்வருத்தத்தையும் ஒழிப்பர். பல மூர்த்திகளாக அந்தப் பகவான் விளங்கினும் ஆசைமுதலியதீமைகளையடையார். குற்றமுள்ள பொருட்கள் எல்லாவற்றையுங் கொழுத்திச் சாம்பராக்குந் தீயினுக்கு அக்குற்றஞ் சிறிதும் இல்லாதிருப்பது போலவே வினைச்சம்பந்தத்தை ஒழிக்கும் ஈஸ்வரனுக்குச் சிறிதும் வினைச்சம்பந்தம் உண்டாகமாட்டாது. நெருப்பானது இரும்பு முதலிய லோகங்களைச் சுடுவது போல ஈஸ்வரன் எல்லாமூர்த்தங்களையுந் தத்தமக்கியன்றவாறு ஒழுகச்செய்கின்றார் அந்தப்பகவான் சர்வவியாபியாக எல்லாப் பொருள்களிலும் விளங்குகின்றாராதலின், அந்த ஈஸ்வரனை மண், கல், மரம், மணி முதலிய எல்லாப் பொருள்களிலும் பூசிக்கத்தகும் அப்பகவானைத் தத்தமக்கியன்ற ஒருபொருளில் அருச்சித்தவர்கள் இஷ்டசித்திகளை அடைவார்கள். எப்பொருளிலும் சிவலிங்கமே சாலச் சிறந்தது.

சித்தும் அசித்துமாகிய பொருள்களை ஒன்றுசேர்த்தாலும் அவைகட்குள்ள குணங்கள் மாறுபடா. எதுபோலெனில் சூரியனுதிக்கத் தாமரை விரிதலும், அதனோடுள்ள ஆம்பல் முதலிய பிறமலர்கள் விரியாமையும் போலும் மலசம்பந்திகளுக்குச் சிவபெருமான் ஒருபோதும் மோக்ஷத்தைக் கொடுக்கமாட்டார் மலத்தை நீக்கினவர்களுக்கே சிவபெருமான் மோட்சத்தைக் கொடுப்பார். ஆனால் சிவபெருமானுக்கு அம்மலங்களில்லை. மலமானது ஆன்மாக்கட்கேயுரியது. ஆதலின், சீவன் இன்பதுன்பங்களை அனுபவிக்க மாயாசம்பந்தத்தாற் கருமங்களைச் செய்யும். கரும மாயைகளின் அனுபந்தமான சமுசாரமும் சீவனுக்கேயன்றிச் சிவனுக்கு எவ்வளவுங் கிடையாது. சீவனுக்குச் சுதசித்தமாகத் தானேவாத்தக்கதோர் மலமுளது. அது தானே வருமாயினும் காரணநிமித்தமாக வாக்கூடியது. அக்காரணம் ஒன்றுமினும் பலசக்திகள் உடையதாகவிருக்கும் கருமமாயைகள் சிவனுக்குச் சிறிதுமில்லை. ஆன்மாவானது அனைவருக்குஞ் சமமாயிருப்பினும், சிலர் பந்தமுடையவர்களும், சிலர் முத்தர்களும், சிலர் பரர்களுமாயிருக்கிறார்கள். சிலர் லயபோகாதிகளாய் ஞானைசுவரியாதிகளின் தாரதம்மியங்களை அடைகிறார்கள். சிலர் மூர்த்திகளாகிறார்கள் சிலர் சிவசொரூபிகளாய் அத்துவாக்களின் சிரசிலிருப்பவர்கள். சிலர் மகேசுரர்களாய் அத்துவாக்களின் இடையிலிருப்பார்கள். சிலர் உருத்திரர்களாய் அத்துவாக்களின் அடியிலிருப்பார்கள். மாயாசம்பந்தமற்றுச் சிவசக்தியிலிருப்பவர்களில் ஆத்மஸ்வரூபங் கீழும், அந்தராத்மஸ்வரூபம் மத்தியிலேயும், பரமாத்மசொரூபம் மேலேயும் விளங்கிப் பிரம விஷ்ணு உருத்திரர்களென்றுசொல்லப்படுவர்கள். இம்மூன்று பதவிகளில் அநேகர் வசிக்கிறார்கள். சாந்திய தீதபதத்திற் சைவர்களும், சாந்தி பதத்தில் மகேசுரர்களும், வித்தியா பதத்தில் உருத்திரபத்தர்களும், பிரதிஷ்டாபதத்தில் விஷ்ணுபத்தர்களும், நிவிர்த்திபதத்தில் பிரமபத்தர்களும் வாழ்வார்கள். இவையே தேவயோனி அஷ்டகமாம். இவையே உச்சத்தானத்திலிருப்பனவும் உத்தமமுமாம். ஒன்பதாவது மானுடயோனி. அது மத்தியிலிருப்பதும் மத்திமமுமாம் பசுயோனிகள் ஐவகை. அவை தாழ்விலிருப்பனவும் அதமமுமாம். ஆகப்பசுவர்க்கம் பதினான்கு வகைப்படும். சீவனுக்கு மலத்தின் ஏற்றக்குறைவுகளால் இவ்வகை யோனிகள் ஏற்படுகின்றன.

சமுசார காரணமான மலங்கள் ஆமமென்றும் பக்குவமென்றும் இருவகைப்படும். ஆமமலத்தால் சீவர்களுக்குத் தாழ்ந்த யோனியும், பக்குவமலத்தால் உயர்ந்த யோனியுஞ் சம்பவிக்கும். பசுக்களாகிய சீவர்களுக்குள் ஒருமலமுடைமையிலும் இருமலமுடைமைதாழ்ந்தும், இருமலமுடைமையிலும் மும்மலமுடைமை தாழ்ந்தும், உத்தம மத்திம அதமர்களாவார்கள். இம்மூவகையினரைக் காட்டிலும் சாம்பவமூர்த்தியே சிறந்தவர். உருத்திராத்மகமான இந்தச்சகமானது உருத்திரனால் அதிட்டிக்கப்பட்டுள்ளது. சிவஸ்வரூபமான எல்லாவற்றையுஞ் சிவபெருமானே அதிட்டித்துளர். அண்டாத்தமான பூமியானது சதருத்திரர்களால் அதிட்டிக்கப்பட்டுள்ளது. மாயாந்தமான அந்தரிக்ஷமானது அமரேசனுதியுருத்திரர்களால் அதிட்டிக்கப்பட்டுள்ளது அங்குட்டமாத்திரமான சீவர்களால் யாவும் வியாபகமாயிருக்கின்றன. மகா மாயாவாசனுதிகளான புவனபதிகளும் அதுவாக்களிலுள்ளவர்களுமாகிய தேவர்களால் யாவும் அதிட்டிக்கப்படாவிடினும், ஒவ்வொன்றும் ஒவ்வொருவரால் அதிட்டிக்கப்பட்டும், யாவும் சாம்பவ மூர்த்தியால் அதிட்டிக்கப்பட்டும் விளங்கும். இவ்வகைய மூவகை மலசம்பந்தத்தால் சீவர்களுக்குச் சமுசாரம் என்னும் நோய் உண்டாகிறது. அந்தச் சமுசாரரோகத்தை ஒழிப்பதற்குச் சருவேசனுடைய அனுக்கிரகத்தாலுண்டாகும் சிவஞானமே பரமௌஷதம். நோயாளிக்கு வைத்தியன் நோயைத் தீர்ப்பதுபோல, பரமகாருண்யரான சருவேசுரன் சமசார ரோகிக்கு நியாமகனுயிருந்து, அநாயாசமாக அதையொழித்துச் சுகப்படுத்துகின்றார். துக்கமுண்டாவதற்குச் சமுசாரமே காரணம். சுக முந்துக்கமும் சுபாவமாகவே யுண்டாகும், ரோகமானது வைத்தியனாலுண்டாக்கப்படாதது போலன்றிச்சருவேசுரனாலேயே சமுசாரபந்தங்களுண்டாக்கப்படினும், அந்தப்பகவானுக்கு அவற்றால் ஒரு தோஷமுமுண்டாகாது. அவை சுபாவமாம். சமுசாரகாரணமான மலமே மாயை. அது அசேதனமானது அது இரும்பைக் காந்தமிழுப்பது போலச் சிவபெருமான் கருதிய மாத்திரமே சுவயமாகத் தொடருகின்றது. அம்மாயையை யொழிப்பதற்குச் சாந்தித்தியமே காரணம். சிவபெருமானுடைய கட்டளையின்றி யாதொரு காரியமும் நிகழமாட்டாது. யாவுஞ் சருவேசனாற் செய்யப்படுமாயினும் சுகதுக்கங்கட்காக அவர் நிந்திக்கப்படத் தக்கவரல்லர். சருவேசுரனுடைய சக்தியோ சர்வதோமுகியாயுள்ளது. அந்தச் சக்தியால் எல்லாப் பிரபஞ்சமும் வியாப்தமாயிருப்பினும் சர்வேசுரன் தூஷிக்கத் தக்கவல்லன். அநாதியாக எல்லாப்பிரபஞ்சமும் ஈசுவரனுக்கு அடங்கியதாகவும், ஈசுவராஞ்ஞாரூபமான சக்தியே பிரபுவாகவுமுடையது மாயிருத்தலின் ஈசுவரன் தூஷிக்கப்படமாட்டார். ஈசுவர சக்தியாலுண்டாகும் மலசம்பந்தமான சமுசாரபந்தமானதை ஈசுவரனாலேயே உண்டாகிறதென்றும் அவரே தூஷிக்கப்படத் தக்கவரென்றும் நினைக்கின்ற துர்மதியுடையவன் அஞ்ஞானத்தால் நினைக்கின்றான். இது சத்தியம்! இவ்வாறு சைவபுராண வாயுசங்கிதை கூறுகின்றது. —'கலாவல்லி'.

## அரசனும் குரவனும்

அல்லது

### ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது.

(ஓர் சிறுகதை)

(ஸ்ரீமத் சுவாமி பூரணனந்தா)

காலம் கண்பகர்: எவ்வித கலன்களும் இசைவுடன் பெற்ற ஓரரசன் தன் இராச்சிய கருமங்களை யெல்லாம் முடித்துவிட்டுத் தன் அறையில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு முன்னால் ஓர் முகம்பார்க்கும் கண்ணாடி யிருந்தது. அதன்முன் நின்று அவ்வண்ணல் தனது தலைமயிரைப் பார்த்தான். கன்னங்கரேலெனக் கறுத்த அம்மயிர்களுக்கிடையில் வெள்ளிக் கம்பியெனக் கரைத்த சில மயிர்கள் அவன் கண்ணுக்குப் புலப்பட்டன. அத்துடன் அவனுடைய முகமும் சிறிது சுருக்கியிருப்பதைப் பார்த்தான். முதுமை வயது மிக்க சமீபித்துவிட்டது என்பதைப் புரவலன் உணர்ந்தான். "ஆம், எனது வாழ்க்கை இப்போது ஒரு மாற்றத்தை அடைந்திருக்கிறது. முதுமைக்காலத்தை யான் அடையப்போகின்றேன். அரசியற் கருமங்களை இதுகாறும் குறைவறச் செவ்வனே ஆற்றியிருக்கின்றேன். இதைவிட, உலகத்தில் மனிதர் அனுபவிக்கவேண்டிய போகபோக்கியங்களை யெல்லாம் அனுபவித்துவிட்டேன். எனது சிரேஷ்ட குமாரனே இனி இந்த அரசியற் கடமைகள் யாவற்றையும் பார்க்கவேண்டியவனாய் இருக்கிறான். அப்படி அவன் பொறுப்பில் இந்த ராச்சிய பாரத்தை ஒப்புவித்துவிட்டு சம்சார வாழ்க்கையினின்றும் நான் விலகி ஏகாந்தமான இடத்தில் உள்ள ஆசிரமம் ஒன்றில் வசித்துவரல்வேண்டும். அந்த ஆச்சிரமத்தில் வசித்து, என் ஐம்புலன்களையுமடக்கி, இறைவனைப்பற்றி அறிவதிலேயே என் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருப்பேன்" என்று அந்த மன்னவன் சிந்திக்கலாயினன்.

அரசன் தன் சேவகர்களைக் கூப்பிட்டு ஓர் ஏகாந்தமான இடத்தல் அழகான ஓர் ஆசிரமம் அமைப்பின்! எனப் பணித்தான். ஒற்றரும் அங்ஙனம் இசைத்தனர். பின்னர் பூமான் கல்வியறிவால் மேம்பட்ட தன் குலகுருவை யழைப்பித்துத் தன் எண்ணத்தை வெளியிட்டான். "நன்று! நன்று!!" எனத் தலையசைத்தான் அந்தண அறிஞனும் "அரசே! ஸ்ரீ கிருஷ்ண பரமாத்வின் திருவிளையாடல்களைப்பற்றியும் அவரின் பக்தர்களைப்பற்றியும் விளக்கும் நூலாகிய பாகவதத்தை நாடோறும் யான் நினக்கு வாசித்து வருவேன். அது நின் தியானத்துக்கு மிக்க நன்மையளிப்பதற்கேதுவாகும்" என்று அக்குரு கூறினார்.

அந்தணனும் அரசனும் தினந்தோறும் பிற்பகல் வேளையில் அந்த ஆசிரமத்திற் சத்காலட்சேபம் செய்துவரலாயினர்.

இப்படியே அநேகநாட்கள் கழிந்தன. யோகசாதனத்தாலும், தியானத்தினாலும், செல்வம், இராச்சியம், மனைவி, மக்கள் என்பனமேல் அரசன் முன்னர்க் கொண்டிருந்த வாஞ்சை மெல்ல மெல்லக் குறைவதாயிற்று. பற்றுக்குறைய அரசன் யோகத்தைச் சாதனை செய்வதிலும், பாகவதத்தைக் கேட்பதிலும் முன்னரிலும்பார்க்கக் கூடிய கவனமெடுத்தான். ஆரம்பத்தில் அரசன் எண்ணினது என்னவென்றால் பகவானை அறிதல் மிகவும் சுலபமே யென்று ஆனால் வருஷங்கள் கழிந்தன. அப்படிக் கழிந்தும் அரசன் பகவத்தரிசனம் செய்தானல்லன். "அந்தோ, இத்தனை வருஷகாலமாக நான் இந்தப் பாகவதபுராணம் முதலாம் நூல்களைக் கற்றுவருகின்றேனே. அதனாற் பகவத்தரிசனம் கிடைக்கவில்லையே" என்று அரசன் சிந்தைநொந்து கவல்வானுயினன்.

ஒருநாட் பின்னேரம் அரசன் உலாவி வரும்போது, "பகவத் தரிசனஞ் செய்வதற்காக யான் இதுகாறும் இத்துணைப் பாடுபடுகின்றேனே. ஆனாற் பயனொன்றுமில்லையே! இதற்கென்செய்வது! நம் குருநாதரை இதுவிஷயமாக இன்று நிச்சயமாக வினவவேண்டுமே" என்று எண்ணினான் அப்போது அவன் அங்குமிங்குஞ் சுற்றிப் பார்க்கும்போது தனது குருவான பிராமணர், ஓர் ஆற்றங்கரையில் இருந்து சந்தியாவந்தனஞ் செய்வதைக் கண்டான். சென்றான் அவ்விடம்; குருமுன்னிலையில் வணக்கத்துடன் நின்றான். பிராமணரும் தன் சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு நிமிர்ந்து அரசனை நோக்கினார். "அருகே அமர்க" என்று அரசனைப் பணித்தார். அவ்வாறே அரசன் இருந்தான் வேந்தன் முகமாற்றமடைந்ததை நோக்கிய வேதியன், "மதியிற் சிறந்த மன்னவர் திலக! நினக்கு நேர்ந்த மாற்றம் என்னோ? அரசியற் பொறுப்பை நின் அரிய தனையனிடம் ஒப்புவித்தனை! எனவே மனக் கவலை நேரக் காரணமின்றே; பகற்பொழுதை பகவத்நாமத்தை ஸ்மரணைசெய்வதிலும், தியானத்திலுமே நீ கழிக்கின்றனை. அன்றலர்ந்த செந்தாமரை மலர்போன்ற நின் வதனம் வாடக் காரணம் என்னோ?" என உருக்கமாக வினவினர். கொற்றவன் அடிபணிந்து கூறுவான். 'அந்தணரேறே! அருந்தவக் குன்றே! பாகவதம் கற்றால் பாவியின் மனம் சாந்தியடையும் என்ற எண்ணத்துடன் தேவரீர் தமியேன்மேலிரங்கி, அந்நூலைத் தினந்தோறும் எனக்கு ஓதிவருகின்றீர். அங்ஙன்றிக்குத்

தொடர்சி 3-ம் பக்கத்தில்.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஆங்கிரஸ ஆடிமீ ௨௭ௗ வியாழக்கிழமை.

## தடுமாற்றமான காலம்.

ஒரு காலத்திலே குற்றங்கள் மிகக் குறைந்த பகுதியெனவிருந்த யாழ்ப்பாணம் இப்பொழுது பஞ்சமா பாதகங்களுக்கும் இருப்பிடமாய்த் தலைதடுமாறி நிற்கின்றது. கொலை, களவு, கள், காமம், பெரியோர் நிந்தை யெல்லாம் இங்கு இப்பொழுது தலைப்படலாயின. மதுக்கடைகள் இங்கே திறக்கப்பட்ட நாள் தொடக்கமாக கட்குடியரால் இவ்வூர் படும்பாடு கொஞ்சமல்ல. பின்னேரம் 5½ மணிக்குமேல் இங்கே எவரும் வெளிப்பட்டுச் சஞ்சரித்தல் முடியாது; எவ்வகையான ரதங்களும் போக்குவரவு செய்தல் கஷ்டமாயிருக்கின்றது; அசங்கதமான பாட்டுக்களும் தூஷணங்களும் தெருவீதிகளில் பின்னேரத்திலே அதிகப்படலாயின; தெருவீதி வழியே செல்லும் சற்சனர்களோடு குடிவெறியர் தாமாகச் சென்று கொழுவிக்கொள்ளுகிறார்கள்; ஒரு இடத்திலே சண்டை, இன்னொரு இடத்திலே கலகம், மற்றொரு இடத்திலே கத்திக்குத்து, பிறிதோரிடத்திலே களவு, ஒழிந்த ஒரு இடத்திலே மோட்டார்ரத அபாயம் இந்தவிதமாக எங்கேபார்த்தாலும் அல்லோலகல்லோல மாகவே காணப்படுகின்றது

இங்குச் சற்கருமங்கள் பொது நன்மைக்கான கருமங்கள் ஏதும் நடக்கின்றனவோ என்றால் இப்பொழுது ஒன்றுமில்லை கதாப்பிரசங்கமில்லை; சமயப் பிரசங்க மில்லை; பொதுசன நன்மைக்காக உழைக்குஞ் சங்கங்கள் சபைகள் எவ்வகையான முயற்சியுமில்லை; தாசியர் நடனம் வாணவேடிக்கை யென்னுமிவைகளுடன் நாட்டுப்புறத்துள்ள சில கோவில்களில் திருவிழா மாத்திரம் இடையிடையே நடைபெறுகின்றன.

இனி, உற்சவம் விதிப்படி கிரமமாக நடக்கும் நல்லூர்க் கந்தசுவாமிகோவில் போன்ற கோவில்களுக்குச் சனங்கள் பெரும்பாலும் பெண்கள், சிறுபிள்ளைகள், விருத்தர், மரியாதைக்குடன் பட்டோர் போய் உற்சவதரிசனஞ் செய்தல் இப்பொழுது முடியாமலிருக்கின்றது. கோவிலுக்குச்செல்லும் மார்க்கத்தில் குடிவெறியர், கள்வர், துஷ்டரானோர் சஞ்சார மதிகமா யிருந்தலினாலே பகற்கால உற்சவத்திற்குச் சிலர் சென்றாலும் இராக்கால உற்சவத்திற்குப் போகப் பயப்படுகின்றனர். வீடுகளில் இராக்காலங்களில் உறங்குவோரும் கள்வர் பயத்தோடுதான் உறங்கியும் உறங்காமற் கிடக்கின்றார்கள். இந்த நிலைமையில் யாழ்ப்பாணபட்டினம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு இருப்பதென்பதே ஆசங்கை.

மதுபானத்தைப் பழையபடி யாழ்ப்பாணத்திற்குத் கொண்டுவருதற்குத் துணையாக நின்ற அதிகாரிகளே இந்தச் சீர்கேட்டை இப்பொழுது அகற்றல் வேண்டும். "எவன் அபாயஞ் சொன்னானோ அவனே உபாயமுஞ் சொல்லல் வேண்டும்" என்பது பஞ்சதந்திரம். குடிவெறியர்களாயுள்ளவர்கள் வெறி தலைக்கேற தெருவீதிகளில் நின்று, தெருக்களாற் போக்குவரவு செய்யுஞ் சற்சனர்களுக்கு எவ்வகையான இடையூற்றையும் வசதியீனங்களையுஞ் செய்யவிடாது அதிகாரிகளே அவர்களைத் தடுக்க வேண்டும். குடித்துவிட்டுத் தெருவில் நின்று குழப்பஞ் செய்வோரை போலிசார் தேடிப்பிடித்து நீதிஸ்தலத்தில் ஒப்பித்து தக்க சிட்சை செய்விட்டரேல் குடிவெறியர் தெருவீதிகளில் நின்று குறும்பு செய்தல் குறைவாகும். இந்த ஒன்றையேனும் அதிகாரிகள் இப்போதைக்குச் செய்வார்களாக.

## உலகம் பலவிதம்.

—:*:—

(௩௰ம் இலக்கப்பத்திரிகையின் தொடர்.)

நிலாவோடுகூடிய ஒரு இரவு 8 மணிவரையில் ஆநந்தனும் அன்னமும் தங்கள் வாசஸ்தானத்தின் தலைவாசலில் இருந்து பலகருமங்களையும் பற்றிப் பேசும்போது, அன்னம், இடையில், தன்னுயகனைப்பார்த்து "ஏதோ, உங்களைக்கேட்கவேண்டுமென்று இன்றைத்தியானம் நினைத்திருந்தேன், நீங்கள் ஆபீசிலிருந்து வந்தநேரந்தொடுத்து நினைத்து நினைத்துப்பார்த்தேன் ஞாபகம் வரவில்லை, இப்பொழுதுதான் ஞாபகத்தில் வந்தது........" என்று சொல்வதற்கிடையில் ஆநந்தன், "கண்ணே, அன்னம், சொல்லும் சொல்லும்; நீர் விரும்பினால் எதனையும் நான் உடனே செய்துவிடுவேனே, கூசாமற்சொல்லும்" என்று மிக்க பதைபதைப்புடன் கேட்டான். "ஒன்றுமல்ல, பாருங்கள், எமது ஊரிலிருந்து இங்குவந்திருக்கும் என்னையொத்த பெண்களெல்லாம் கோயில் குளங்களுக்குப் போகிறார்கள், ஞாயிற்றுக் கிழமைகளில் கடற்கரைக்குப்போகிறார்கள், கூத்து, படக்காட்சி, கூட்டங்கள், கல்யாண வீடு, பிரியாவிடைக்கொண்டாட்டம், சங்கீதக்கச்சேரி, விருந்து என்னுமிவைகளுக்குத் தவறாமற் போகிறார்கள்; இப்படியெல்லாமிருக்க கிளியைக்கூட்டில் அடைத்து வைத்தாற்போல என்னை இந்தக் குத்தகை வீட்டில் அடைத்து வைத்திருக்கிறீர்களே, எனக்கு இவைகளைப் பார்க்க, நம்மோடொத்த நாலுபெண்களைக் காணப் பேச ஆசையில்லையா; என் குறிப்பறிந்து எல்லாம் எனக்குச் செய்துவருகிறேன் என வாயினால் மாத்திரஞ் சொல்லிக்கொள்ளும் நீங்கள் இந்த விஷயத்தில் மாத்திரம் அறிந்தும் அறியார்போல் இருப்பதென்ன; என்னில் நீங்கள் அன்பு அன்பு என்று சொல்வதெல்லாம் சும்மா வாயுபசாரந்தான்; நான் உங்களிடத்து விசுவாசமென்றாலும், நீங்கள் சொல்லுவதுபோல் நான் ஒருநாளும் வாயினாற் சொல்லிக் காட்டுவதில்லை" என்றாள்.

* * *

இப்படி அன்னஞ் சொல்லக்கேட்ட ஆநந்தன் தடிதுடித்து "ஐயோ, கண்ணே, நான் உன்மீது அன்பில்லாமலல்ல; இதனை உணராமலல்ல; இப்படியான கூட்டங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் போகத் தொடங்கினால் பின் கிரமமாகப் போய்க்கொண்டேவரவேண்டி நேரும். சொந்த "கார்" வைத்திருக்கும் உத்தியோகத்தரின் பெண்களே நீர் சொன்னபிரகாரம் வெளியிற் புறப்பட்டுத் திரிகிறார்கள்; அவர்கள் இவை மாத்திரமல்ல, அரசாங்க விஷயத்திலும் தலையிட்டிருக்கிறார்கள்; இனி அந்த உத்தியோகத்தர்கள் உயர்ந்த சம்பள மெடுப்பவர்கள்; அவர்கள் பெண்களெனினலோ சீமாட்டிகள்; நாமும் கடவுள் புண்ணியத்தால் அந்த நிலையில் வந்துவிட்டால், அப்படிச்செய்யலாம்; பரட்டைச்சிக்குச் சந்தம் வந்தால் உள்ள மயிரோடுதானே சந்தமாடவேண்டும்; ஆனை முபன்றதென்று அதனைப்பார்த்துப் பூனையும் முயன்றால் ஆகுமா; இப்பொழுது அந்த எண்ணங்களை விட்டுவிடும்; அவைகளுக்கெல்லாம் காலமும் நேரமும் இன்னமும் முண்டு........" என்று ஒருவாறு சிறிது கடுகடுப்போடு ஆநந்தன்சொல்லி முடித்தான். அவன் சொன்னவார்த்தை யொன்றேனும் அன்னத்தின் மனசிற்குப் பிடிக்கவில்லை; அன்னம் இவைகளைக்கேட்டமாத்திரத்தே முகவாட்டமடைந்து, அதன்பின் தன் புருஷனுடன் வார்த்தையாடாமற் சிறிதுநேரம் மௌனமாயிருந்து யோசித்தாள்.

* * *

அன்னத்தின் முகவாட்டத்தையும் மனக்கோட்டத்தையும் மௌனத்தையும் உணர்ந்த ஆநந்தன் பெரிதும் வருந்தி அவளுக்கு மிகச் சமீபமாய்ப் போயிருந்து "கண்ணே, அன்னம், என்ன யோசிக்கின்றீர்? ஏன் பேசாமலிருக்கின்றீர்?; முகவாட்டம் ஏன்? நான், என்ன, நீதியைத்தானே சொன்னேன்; அதற்கு நீர் படியாத மூடப்பெண்களைப்போல இப்படி மனஸ்தாபப்படலாமா; கோபிக்கலாமா; மனம் வருந்தலாமா; என்றுசொல்லி அவளுடைய கன்னத்தைத் தன் கையினால் தடவி, அவளைச் சாந்தப்படுத்த முயன்றான். அன்னம் அவன் முகத்திலிட்ட கையைத் தன் புறங்கையினால் தட்டிவிட்டு மறுபுறத்திற்குத் திரும்பியிருந்தாள்; அவளுடைய கண்களினின்றும் நீர் ததும்பியது; இதனையுங்கண்டு ஆநந்தன் சகிப்பானா; உடனே அவன் அவள் கண்ணீரைத் தன் கைலேஞ்சிகொண்டு ஒற்றி பல இன்சொற்கூறி, மனவருத்தப்படவேண்டாமென்று இரந்தான்; வேண்டினான்; கெஞ்சிக் கேட்டான்; அன்னம், நான் முந்திச்சொன்ன சொற்களில் உம்மை இப்படி வருத்தத்தக்க காரணமான சொற்கள் என்ன; நான் ஏதுஞ் சொல்லியிருப்பேனென்று நினைக்கவில்லை; அப்படித்தான் தெரிந்துதெரியாமற்சொல்லியிருந்தாலும் நீ அதனைப் பொருட்படுத்தலாமா; சொன்னவன் உன்நாயகனல்லவா; புருஷன் மனைவிவிஷயத்தில் ஒருகை அடிக்க மற்றக்கை அணைக்கும் என்றல்லவா சொல்லுவார்கள் என்று இப்படி ஆநந்தன் பலவேறு சொல்லி வேண்டவும் அன்னம், தசரதச் சக்கரவர்த்தி பலவாறு இரந்து வேண்டவும், சிறிதும்மனமிளகாத கைகேசியைப்போலப் பிடிவாதஞ்செய்தாள்; சரேலென்று எழுந்து படுக்கையறையுட்சென்று உட்புறத்தாற் கதவைப்பூட்டிக்கொண்டு சயனத்திற் படுத்துவிட்டாள். அவளைத் தொடர்ந்து சென்ற ஆநந்தன் கதவு பூட்டப்பட்டிருப்பதைக்கண்டு, வாசலில் நின்று, நடுக்கடலிற் செல்லும் கப்பலின் பாய்மரத்திலகப்பட்ட காக்கைபோல நின்று தயங்கினான்; கெஞ்சக் கெஞ்சப் பிடிவாதத்தில் அதிகப்படுவது சில பெண்களின் சுபாவமென்று சொல்வர்.

## சமாசாரத் திரட்டு.

—0—

### நீதியரசர் லயல்கிறுன்ற்

இலங்கைச் சுப்ரீம்கோட்டு நீதிபதிகளுள் ஒருவராகிய மிஸ்டர் லயர்கிறுன்ற் அவர்கள் ஜமெக்காத் தீவுக்குப் பிரதம நீதிபதியாக நியமனஞ் செய்யப்பெற்றனரென ஒரு செய்தி கூறுகிறது.

### கரடிப்பொறியில் அகப்பட்டு இறத்தல்.

அவிசாவலை விதிக்கருகாமையில் ஒருவன் இரவில்கரடிப்பொறியொன்றை ஏற்றி வைத்துப் போயினன். அந்த இரவில் அப்பக்கமாகக் கரடி வரவில்லை. அப்படியிருக்க அதிகாலையில் அவ்வழியாகச் சென்ற ஓர் மனுஷன் தற்செயலாய் அப்பொறியுடகாலைவைத்துப் பலத்த காயமடைந்தான். அவன உபாதி பொறுக்க மாட்டாது குரலையிட்டும் உதவிக்கு ஒருவரும் வந்திலர். ஒருமணித்தியாலத்தின் பின்னரே ஒருவர் அந்த அபாயத்தைக் கண்டு பொறியினின்றும் அவனைமீட்டார். இரத்தம் ஓடிக்கொண்டிருந்தமையால் அவன் வைத்தியசாலையில் இறந்துவிட்டனன்.

### மனைவியையும் பிள்ளையையும் கொன்ற பாதகன்.

சென்றமாசம் காலிக்கு 10 மைலுக்கு அப்பால் உள்ள மீட்பி என்ற கிராமத்தில் இரு கொலைகள் நடந்தன என்று தெரிய வருகிறது இறந்தவள் எலென் என்னும் பெண்ணும் அவளின் பெண்குழந்தையுமாகும். இக்கொலைகளைபுரிந்தவன் எலெனென்பவளுடைய கணவனாகிய சாறிடிஸ் எனபவன என்று சொல்லப்படுகிறது. சாறிடிஸ் எனபவன் மனைவியாகிய எலெனுடன் சதா சண்டைபிடிப்பவன எனவும், இற்றைக்கு 5 மாதங்களுக்குமுன் அவளை வீட்டைவிட்டுக்கலைத்துவிட்டான என்றும், சென்ற 2-ம் தேதி அவள் அவனிடம் வந்து பிள்ளையை வளர்ப்பதற்காக ஏதும் பணந் தரும்படி கேட்க அவன் கோபங் கொண்டு ஓர் கத்தியால் தாயையும் பிள்ளையையும் வதைத்துக் கொன்றானெனவும் சொல்லப்படுகிறது.

### பரிதாபமான சடுதி மரணம்.

சென்ற 4 ம் தேதி பிற்பகல் 4 15 மணியளவில் குருவித்தையைச் சேர்ந்த ஷிகேனு என்னும் கிராமத்தில் வசிக்கும் ஓர் தச்சன் இரத்தினபுரி மாகாணத்தலைவர் மிஸ்டர் C. H. கொலின்ஸ் அவர்கள் முன்னால் ஏதோ சம்பாஷித்துக் கொண்டு நின்றபோது சடுதியாக் வீழ்ந்து இறந்தான்.

இறந்த தச்சன் ஓர் அரசாங்க ஒப்பந்தக்காரனின் கீழ்வேலைசெய்தவன். அவ்வொப்பந்தக்காரன் அநேக நாட்களாக இவனுக்குரிய பணத்தைக் கொடுக்கத் தவறினான் சென்றவாரம் மேற்படி தச்சன் தனது கிராமத்தில் இருந்து 9 மைல்தூரம் நடந்து இரத்தினபுரிக்கு வந்து மேற்படி ஒப்பந்தகாரனைக் கண்டு தனக்குரிய பணத்தைத் தரும்படி கேட்டான்; அவன் ஒருவாறுகடத்தவே மகாணத் தலைவராகிய மிஸ்டர் கொலின்ஸ் என்பவரிடம் முறைப்பாடு செய்யுமாறு வந்தான் மாகாணத் தலைவருடன் அவன் தனது துயரங்களை எல்லாம் கூறி நிற்கும் போதே இவ்வாறு மூர்ச்சையாகிவீழ்ந்து உயிர் துறந்தான். அன்றுமுழுவதும் அவன் ஒன்றும் உண்ணவில்லையாம் அத்துடன் வழிநடந்த ஆயாசமுமே அவனுடைய உயிர்க்கு உலைவைத்துவிட்டது.

### டக்டர் அன்சாரியின் வேண்டுகோள்.

மகாத்மாவைக் காணவொண்ணுதாம்.

டக்டர் அன்சாரி அவர்கள் மகாத்மா காந்தியடிகளைத் தம் கண்டுபேச உத்தரவு தரல் வேண்டுமென அரசினருக்கு மனுப் பண்ணியிருந்தனர் அரசின் மனு அரசினரால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

### காயமடைந்த பொலிஸ் அதிகாரி இறந்தார்.

கெமிலப் பகுதிப் பொலிஸ் அதிகாரியான மிஸ்டர் E. B. எல்சன் என்ற ஆங்கிலேயர் சென்ற ஜூலைமாதம் 29 ம்தேதி மனமுடையாரோ சிலரால் சுடப்பட்டு காயமடைந்தாரென அறிவித்திருந்தோம் அவர் சென்ற 5-ம்தேதி மரணமடைந்தார்.

## தென்னாட்டிற் சட்டமறுப்பு.

தொண்டர்களுக்குப் பிரம்படி.

சன்னிக்கோட்டையிற் சென்றவாரம் காந்திதினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ T. கோபாலன்நாயர், ஸ்ரீ T. P. மாதவன் என்பவருட்பட பல தொண்டர்கள் தேசியக் கொடிகளைக் கைகளிலேந்தித் தேசியக்கீதம் படித்துக்கொண்டு ஊர்வலம் சென்றனர். அப்புறம் செல்லாது கலைந்துவிட வேண்டுமென்று பொலிசார் கட்டளையிட்டனர் தொண்டர்கள் பொலிசாரின் கட்டளையைச் சட்டைபண்ணாது தெருவீதியில் உட்கார்ந்தனர். அதனைக்கண்ட பொலிசார் ஈவிரக்கமின்றித் தாறுமாறாகப் பிரம்பால் அடித்தனர். பிரம்படிக்கும் தொண்டர்கள் அசையாததைக் கொண்ட பொலிசார் அவர்களைச் சிறைப்படுத்திக்கொண்டு சென்றனர்.

## சட்டமறுப்புக்கு எதிர்ப் பிரசாரம்.

தென்னிந்தியாவில் நடக்கும் சட்டமறுப்புப் போருக்கு எதிராகப் பிரசாரஞ் செய்யுவேலையில் அரசாங்க உத்தியோகத்தர் பலர் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்றும், அவர்களுக்குச் சென்னை அரசினரே போதிய ஆதரவு அளித்துவருகின்றார்கள் என்றும் வதந்தி உலவியதது இது மெய்தானோ என்று சென்னைச் சட்டசபையில் அங்கத்தவர்கள் வினவினர். அதற்குத்தரமாக, உள்நாட்டுமந்திரி அரசாங்க உத்தியோகத்தர் அத்தகைய பிரசாரங்களைச் செய்வதற்காகக் கட்டாயப் படுத்தப்படவில்லையென்றும் சட்டமறுப்புக் கெதிரான நடவடிக்கைகளை கையாட வேண்டுமென அவர்கள் விரும்பும்போது அத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் கையாளும்படி அநுமதிக்கப் படுகின்றார்கள் என்றும் கூறினர்.

## பெண்மணியின் வீரப்பேச்சு.

மங்களூரைச் சேர்ந்த சேரிகோட்டத்தில் வசிக்கு நியாயவாதியாகிய திரு தெலிசேரிகர் அவர்களின் 21 வயதுடைய மனைவியாகும் ஸ்ரீமதி கமலாபாய் என்னும் பெண்மணி சட்டமறுப்பியக்கத்தில் பங்கு பற்றினதற்காக பதூர் நீதிபதியால் விசாரணை செய்யப்பட்டார். விசாரணையின்போது நீதிபதிக்கும் அப்பெண்மணிக்கும் பின்வரும் சம்பாஷனை நிகழ்ந்தது.

நீதிபதி: எச்சரிக்கையுடன் நான் உம்மை இப்போது விடுதலை செய்கிறேன். என்னைப்போன்ற ஒரு வயதின் மூத்தவரின் புத்திமதிகளை நீர் கேட்கவேண்டும்.

ஸ்ரீமதி கமலாபாய்: ஆனால் காந்தியடிகள் உம்மிலும் பார்க்க வயதில் மூத்தவராச்சே.

நீதிபதி. ஆனால் அவர் இங்கேயில்லை இனிநீர் சட்டத்தை மீறக்கூடாது.

ஸ்ரீமதி கமலாபாய்: நான் என் தொண்டை ஆற்றியேவருவேன்.

நீதிபதி: நீர்ஒரு இளம்பெண்; உம்முடைய முதியோருக்குச் செய்யவேண்டிய கடமைகள் அநேகமுண்டு.

ஸ்ரீமதி கமலாபாய்: தேசிய மாசபைக்குரிய கடனைச் செய்வதைவிட வேறு ஒருதொண்டும் இப்போது எவரும் செய்யவேண்டியதில்லை. என்னவீரம்!

## ஆவணிமாத விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| ௧ௗ. | (16 8 32) | செவ்வாய்: திருக் கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் உற்சவாரம்பம். |
| ௮ௗ. | (23-8-32) | செவ்வாய்: கார்த்திகை விரதம். |
| ௯ௗ. | (24-8-32) | புதன்: ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி. |
| ௧௪ௗ. | (29-8-32) | திங்கள்: பிரதோஷ விரதம், செருத்துணைநாயனார் குருபூசை |
| ௧௫ௗ. | (30 8-32) | செவ்வாய். நல்லூர்க் கந்தசுவாமிகோவில், திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் ரதோற்சவம்; அதிபத்தநாயனார், புகழ்த்துணைநாயனார் குருபூசை. |
| ௧௬ௗ. | (31.8-32) | புதன்: அமாவாசை விரதம், நல்லூர்க்கந்தசுவாமி கோவில். வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவம்; திரிகோணமலை வீரகத்திப்பிள்ளையார் உற்சவாரம்பம்; இளையான்குடிமாறநாயனார் குருபூசை. |
| ௧௭ௗ. | (1.9 32) | வியாழன்: நல்லூர் பூங்காவன உற்சவம். |
| ௧௮ௗ. | (2 9 32) | வெள்ளி: மறைஞானசம்பந்தர் குருபூசை; சொட்டியாபுரம் வெருகல் சித்திரவேலாயுதசுவாமி உற்சவாரம்பம். |
| ௧௯ௗ. | (3 9-32) | சனி: சாமவேத உபாகர்மம். |
| ௨௰ௗ | (4-9-32) | ஞாயிறு: விநாயக சதுர்த்தி விரதம், சியாதெரு சித்திவிநாயகர் உற்சவாரம்பம். |
| ௨௧ௗ | (5 9-32) | திங்கள்: வல்லை செடியகாட்டுப் பிள்ளையார்; தையிட்டி கணையவிற்பிள்ளையார், மண்டைதீவு சித்திவிநாயகர்; வவுனியா மருதோடைக் கந்தசுவாமிகோவில்கள் உற்சவாரம்பம். |
| ௨௩ௗ | (7-9 32) | புதன்: குலச்சிறைநாயனார் குருபூசை. |
| ௨௪ௗ | (8-9 32) | வியாழன்: ஆவணி மூலம்; குங்குலியக்கலயநாயனார் குருபூசை. |
| ௨௮ௗ | (12 9 32) | திங்கள்: பிரதோஷ விரதம்; இருக்குவேத உபாகர்மம். |
| ௩௰ௗ | (14 9-32) | புதன்: பூரணைவிரதம்; யஜுர்வேத உபாகர்மம்; சந்திர கிரகணம்; ஓமந்தைப் பிள்ளையார்; தொண்டமானாறு செல்வச் சந்நிதி; முனீஸ்வரம் தீர்த்தோற்சவம். |
| ௩௧ௗ | (15.9-32) | வியாழன்: மஹாளயபட்ச ஆரம்பம். |

## வல்லைவெளியிற் சிங்களப்பெண்ணின் கொலை.

(1) நாவிதன் ஞானமுத்து, (2) கயித்தான் இளையவன், (3) நாவிதன் கணபதி என்னும் மூவர் எல்லி என்னும் ஒரு சிங்களபெண்ணைக் கொலைசெய்தனரென்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் பிரத்தியேக நீதிபதியாகிய மிஸ்டர் சைமன் றொட்றிகோ என்பவரால் விசாரணை செய்யப்பட்டது. முதலாமெதிரியாகிய ஞானமுத்து என்பவனுக்கு நியாயதுரந்தரர் ஸ்ரீ G G பொன்னம்பலமும், ஸ்ரீ K. V. சின்னத்துரையும் ஏற்பட்டனர். இரண்டாம் எதிரியாகிய கயித்தான் இளையவன் என்பவனுக்காக ஸ்ரீ K. V. சின்னத்துரையும், மூன்றும் எதிரிக்காக மிஸ்டர். C. L. செல்வரத்தினமும் ஏற்பட்டனர்.

முதலாவது, கணபதி என்ற எதிரியின் மருமகன் அருளப்பன் சுமார் 6 வாரங்களுக்கு முன் ஞானமுத்து தன் வீட்டுக்கு வந்து முருகன், இளையவன், கணபதி மூவரையும் அழைத்து 3மணி நேரவரை இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்து அன்றிரவு ஞானமுத்து அவ்வீட்டில் தங்கியிருந்ததாகக் கூறினன்.

நீதிபதி மற்றும் விசாரணையை 9 ந் தேதிக்கு ஒத்திவைக்க விரும்பினபோது கணபதி வாக்கு மூலம் கொடுக்க விரும்புவதாக முன்வந்தான்.

நீதிபதி:- உண்மையான விபரங்களை விபரமாய்த் தெரிவிக்கவேண்டும். உண்மையைக் கூறுவாயாகில் உனக்கு அனுகூலமேற்படும். உண்மையை மறைக்கப் பிரயாசைப்படுவாயாகில் கஷ்டத்திற்குள்ளாவாய்.

கணபதி:- பயத்தின் மிகுதியால் நான் இதுவரை உண்மையைக் கூறாதிருந்தேன். கோட்டார் என்னைக் காப்பாற்றவேண்டும். இவ்வழக்கின் உண்மை விபரம் பூராவும் எனக்கு நன்றாய்த் தெரியும்.

நீதிபதி:- நீ பயப்படவேண்டாம். பொதுஜனங்களும் பொலிசாரும் உன்னைப் பாதுகாக்கத் தயாராயிருக்கிறார்கள்.

### 3-ம் பிரதிவாதியின் வாக்குமூலம்.

கணபதி:- ஜூன் மாதம் 22 ந் தேதி புதன்கிழமை நான் ஞானமுத்துவின் கடைக்குச் சென்றேன். அப்பொழுது ஞானமுத்து, சூரி, துரைராஜா மூவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். இளையவனிடம் ரூபாய் கொடுத்திருப்பதாகவும் நான் அதை வாங்கி வரவேண்டுமென்றும் ஞானமுத்து தெரிவித்தான். இளையவன் என்னைத் தன் வீட்டிற்கு அழைத்துச்சென்று 15 ரூபாய் கொடுக்க நான் அத்தொகையை வாங்கிக்கொண்டு வந்தபொழுது ஞானமுத்துவையும் அங்கேயிருந்தவர்களையும் கடையில் காணவில்லை.

ஞானமுத்துவின் வேலைக்காரனான பிரகாசமும் மின்சாரக்கம்பெனியில் வேலைசெய்யும் சின்னமணிதனும் கடையிலிருந்தார்கள். சூரிக்கு வேலைக்காரியாக ஒரு சிங்கள மங்கையை ஞானமுத்து அழைத்துவரச் சென்றிருப்பதாகவும் அவன் வரும்வரை நான் தாமதித்திருக்கவேண்டுமென்றும் பிரகாசம் தெரிவித்தான்.

### கிணற்றில் விழுந்த கதை.

நான் அங்கு காத்திருந்தேன். மாலை 8 மணிக்கு ஞானமுத்துவின் கடைமுன் ஒரு மோட்டார் வந்து நின்றது. கடைக்குள் எரிந்துகொண்டிருந்த விளக்கை உடனே பிரகாசம் அணைத்தான். ஞானமுத்துவும் ஒரு சிங்கள மங்கையும் கடைக்குட் பிரவேசித்தார்கள். அவ்வமயம் ஞானமுத்து கையில் டிரங்குப்பெட்டி யொன்றிருந்தது. அக்கடை க்ஷவரக்கடையென்பதாக அம்மங்கைக்குத் தெரியக்கூடாதென்று விளக்கை அணைத்ததாகப் பிரகாசம் தெரிவித்தான்.

ஞானமுத்து காப்பி, ரொட்டி முதலானவை வாங்கிக் கொடுத்தான். ஆனால் முதலாளியைப் பார்க்கும்வரை அவற்றை அப்பெண் அருந்த மறுத்ததாகவும் முதலாளி சீக்கிரம் அங்கு வந்து சேர்வாரென அப்பெண்ணுக்குத் தெரிவித்ததாகவும் ஞானமுத்து சொன்னான்.

சூரிக்கு ஒரு ஆயாள் தேவையிருப்பதாகவும் ஆகையால் பொலனையாவீட்டிலிருந்து சிங்களப் பெண்ணை அழைத்துவந்ததாகவும் ஞானமுத்து எனக்குத் தெரிவித்துத் தான் வீட்டுக்குப் போகப் புறப்படுவதாகவும் நான் வீட்டுக்குப் போகலாமென்றும் எனக்குத் தெரிவித்தான். அதன்பேரில் நான் நேரே வீட்டிற்குப் புறப்பட்டேன்.

24-ந் தேதி காலை 10-30 மணிக்கு பிரகாசம் என் கடைக்கு வந்து கதவை முதலாவது அடைத்து அதன்பின் தான் கிணற்றில் போய் பார்த்தபொழுது அங்கு சிங்களப்பெண் கிணற்றில் மிதக்கக் கண்டதாகவும் அவள் கிணற்றில் விழுந்த நேரம் தனக்குத் தெரியாதென்றும் ஞானமுத்து என்னை ராயல் தியேட்டரைச் சேர்ந்த துரைராஜா வீட்டிற்கு அழைத்துவரச் சொன்னதாகவும் ரகசியமாய்த் தெரிவித்தான். எனக்கு வேலையிருப்பதால் அதை முடித்துக் கொண்டு வந்து சேர்வதாகத் தெரிவித்தேன். சூரிக்காக அழைத்துவந்த வேலைக்காரியை ஞானமுத்து கடையில் வைத்திருந்த காரணத்தைப்பற்றிக் கேட்டேன்.

முந்தின இரவு துரைராஜா ராயல் தியேட்டர் பெரிய துரைராஜா, சூரி, ஒரு பாய் நால்வரும் அக்கடையில் கூடி சந்தோஷங்கொண்டாடினதாகவும் இரவு பத்து மணிக்குமேல் தான் வீட்டிற்குத் திரும்பினதாகவும் மறுநாள் 24-ந் தேதி காலை 7மணிக்குக் கயிறுகள் வாங்கிவரும்படி ஞானமுத்து சல்லிகொடுத்ததாகவும் அப்படியே பிரகாசம் சென்று கயிறுகள் வாங்கிக்கொண்டு வந்தபொழுது அப்பெண் அணிந்திருந்த சட்டை 6 துண்டுகளாக கிணற்றுக் கட்டின்மேலிருப்பதை ஞானமுத்து காட்டினதாகவும் அதன்பேரில் பிரகாசம் கிணற்றண்டை சென்று பார்த்தபொழுது அப்பெண் உடல் சுருண்டவளாகவும் முகத்தைக் குப்புற வைத்தவளாகவும் கிணற்றில் மிதப்பதைக் கண்டதாகவும் அப்பொழுது விபரத்தைப் பொலீசுக்குத் தெரியப்படுத்தப் போவதாகப் பிரகாசம் கூற ஞானமுத்து தன்னைக் காட்டிக்கொடுக்க வேண்டாமென்றும் என்னை துரைராஜா வீட்டுக்கு அழைத்துவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் பிரகாசம் தெரிவித்தான்.

நான் துரைராஜா வீட்டுக்கு வந்து சேர்வதாகத் தெரிவித்தேன். சிறிது நேரத்தில் முகமலர்ச்சியோடு வந்த ஞானமுத்துவைச் சந்தித்தேன். அவ்வமயம் அப்துல்லாவுக்கு க்ஷவரம் செய்துகொண்டிருந்தேன். ராஜாக்கள் (பெரிய மனிதர்கள்) இக்காரியத்தை கவனித்துக்கொள்வார்களாதலால் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாமென்றும் கடையை அடைத்து வைத்திருந்ததற்காகத் துரைராஜா கோபித்ததாகவும் அங்கு அதிகநேரம் தாமதிக்க முடியாததால் நான் சீக்கிரமாக துரைராஜா வீட்டிற்குச் சென்று அவன் கடைக்கு வந்துசேரவேண்டுமென்றும் ஞானமுத்து எனக்குத் தெரிவித்துச் சென்றான். அதன்பின் நானும் பிரகாசமும் துரைராஜா வீட்டிற்குச் சென்றோம். முந்தினம் ஞானமுத்து திருக்கூத்தாடினதாகத் துரைராஜா தெரிவித்தார். அதன்பின் ஞானமுத்து கடைக்குச் சென்றேன். ஒரு மோட்டார் கொண்டுவரவேண்டுமென்று ஞானமுத்து கேட்டான். அவ்விஷயம் என்னால் முடியாதெனத் தெரிவித்தேன். என்னை அங்கு காத்திருக்கும்படி கட்டளையிட்டு ஞானமுத்து வெளியே சென்றான். அவன் பெரிய மனிதனின் உதவியை நாடிப் போயிருப்பதாக இளையவன் தெரிவித்தான்.

அரையணி நேரத்தில் சாராயப்போத்தலோடு ஞானமுத்து திரும்பினன். 50 சதத்தை என்னிடம் கொடுத்து மீரான் கடையில் இறைச்சி வாங்கிக்கொண்டு வந்தபின் மூவரும் சாராயம் குடித்தோம்.

### கிணற்றிற் கண்ட பிரேதம்.

அதன்பின் இளையவனும் நானும் கிணற்றண்டை சென்று பார்த்தோம். பிரகாசம் தெரிவித்த விபரப்படி விஷயங்களைக் கண்டோம் மறுபடியும் ஞானமுத்துவின் கடைக்கு வந்து இருவரும் சாராயம் குடித்துக்கொண்டோம். அதன்பின் நாங்கள் துரைராஜா வீட்டுக்கு வந்தோம். அங்கு மோட்டர்ச் சாரதி முருகேசு இருந்தார்.

சாரதி இல்லாத தனிமோட்டார் வேண்டுமென துரைராஜா தெரிவித்தார். மறுபடியும் ஞானமுத்து கடைக்கு வந்தபொழுது கடை திறந்திருந்தது. அவ்வமயம் பிற்பகல் 4 மணியிருக்கும். போதுமான சாராயம் கொடுத்தால் தான் கிணற்றில் இறங்கி அப்பிரேதத்தைக் கயிற்றால் கட்டுவதாக சாரதி முருகேசு தெரிவித்தார். அப்படியே முருகேசு இறங்கிப் பிரேதத்தைக் கயிற்றிற் கட்டி கரையேறினபின் நால்வருமாக அப்பிரேதத்தை இழுத்து வெளியே எடுத்தோம்.

அதன்பின் ஞானமுத்து ஒருரூபாய்கொடுக்க நானும் முருகேசுவும் சின்னக்கடைத் தெருவுக்குச் சென்று ஒரு சாக்கும் சில கம்பிகளும் வாங்கிக்கொண்டு வந்தோம். அதன்பின் நானும் இளையவனும் முதலாவது பெரிய துரைராஜா வீட்டுக்கு வந்தோம். சின்னதுரைராஜாவும் அங்கிருந்தார்.

நடக்கவேண்டிய காரியங்களெல்லாம் முடிந்ததாவென்று பெரியதுரைராஜா கேட்க, ஒன்றும் முடியவில்லையென இளையவன் பதிலிறுத்தான். சிறிது நேரத்தில் முருகேசுவும் ஞானமுத்துவும் அங்குவந்துசேர்ந்தபொழுது சின்ன துரைராஜா ஞானமுத்தைத் தனிமையாக அழைத்து ஏதோ சொல்லி நடக்கவேண்டிய காரியங்களைத் தயாரிக்குமாறு கேட்டதுமன்றி தாம் மோட்டார்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். அவ்வமயம் பெரிய துரைராஜா ஒரு சாக்கையும் சில கயிறுகளையும் கொடுத்தார். அப்பொழுது மாலை 6-45மணியிருக்கும்.

அவற்றைப் பெற்றுக்கொண்டு ஞானமுத்து கடைக்கு நாங்கள் திரும்பிவந்தோம். உடனே ஞானமுத்து வெளியே சென்று 5 நிமிஷத்தில் ஒரு போத்தல் சாராயம் கொண்டுவந்து எங்களுக்குக் கொடுத்தான்.

### மோட்டர் ரதத்தை செலுத்தியது யார்?

அதன்பின் நாங்கள் பிரேதத்தின் தலைமாட்டை ஒரு சாக்கினாலும் கால்மாட்டை மற்றொரு சாக்கினாலும் மூடிக் கட்டி அவற்றைக் கடையின் ஓர் மூலையில் ஒதுக்கிவைத்துக் கடையைப் பூட்டிக்கொண்டோம். முருகேசுவும் ஞானமுத்துவும்சென்று இரண்டு திருகைக்கற்களைக்கொண்டு வந்தார்கள். அதன்பின் மோட்டார் வந்து சேர்ந்தது. திருகைக் கற்களும் பிரேதமும் மோட்டாரில் வைக்கப்பட்டன. சின்னத்துரைராஜா மோட்டாரை ஓட்டினர். பெரிய துரைராஜவும் முன்னாசனத்திலுட்கார்ந்துகொண்டார். நானும் இளையவனும் ஞானமுத்துவும் முருகேசுவும் பின் ஆசனத்திலுட்கார்ந்து கொண்டோம் நிலாவரை தனக்குத் தெரியுமென்று முருகேசு தெரிவித்தார். அவர் தான் பாதைகாட்டினர். மோட்டார்ரதம் வல்லைக்குவந்தபொழுது, போதுமான பெட்ரோல் இல்லாதபடியால் நிலாவரைக்குப் போகமுடியாதென்றும் அவ்விடத்தில் காரியங்களை முடிக்கவேண்டுமென்றும் பெரிய துரைராஜா தெரிவித்தார். அதன்பேரில் வல்லைப் பாலத்துக்குச் சமீபத்தில் மோட்டாரதத்தை ஒருபுறம் நிறுத்திவைத்து நால்வரும் பிரேதத்தைத் தூக்கிப் பாலத்தின் கட்டின்மேல் உயர்த்தி தண்ணீரில் எறிந்தோம். அப்பிரேதத்தின் கழுத்தில் ஒரு திருகைக்கல் கட்டப்பட்டிருந்தது. மோட்டாரைச் செலுத்திவரும்பொழுது வழியில் அவ்விதம் பின் ஆசனத்திலிருந்தவர்கள் அவ்விதம்கட்டினர். பிரேதம் இறக்கப்பட்ட இடத்திற்கு நேரே மற்றொரு திருகைக் கல்லை ஞானமுத்து இறக்கினன்.

அதன்பின் நாங்கள் திரும்பினபொழுது மோட்டார் செலுத்தி வரும்பொழுதே பெரிய துரைராஜாவிடமிருந்து மின்சாரக்கைவிளக்கை ஞானமுத்து வாங்கி மோட்டாரைச் சோதித்துப் பார்க்க, ஒரு கதவில் சிறிது ரத்தத்துளிகள் காணப்பட்டன. உடனே அக்கதவின் துணியையும் பலகையையும் ஞானமுத்து கிழித்தெறிந்தான். எல்லாரும் பெரிய துரைராஜா வீட்டில் வந்திறங்கினோம்.

கொலையுண்டவள் பிரேதம் கிணற்றில் முகம் குப்புற விருந்ததால் அவள் முகத்தில் காயங்களைப் பார்க்கவில்லை.

நீதிபதி மற்றும் விசாரணையை 9-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

பிந்திய விசாரணையை 5-ம் பக்கத்திற்காண்க.

## நெடுந்தீவிலும் இரணைதீவிலும் ஆடுமாடு வளர்க்க மனு.

மகாணத் தலைவரின் மறுப்பு.

அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படும் உயர்தரமான ஆடுமாடுகளிலிருந்து இலங்கையில் அவ்வினங்களை அபிவிருத்தியாக்குவதற்காக கொழும்பில் உள்ள கௌரவ. மிஸ்டர் அப்துல்றகிமான் அவர்கள் நெடுந்தீவுஇரணைதீவு என்னுமிடங்களிலுள்ள புற்றரைகளைத் தமக்கு 50 வருஷக் குத்தகைக்குத் தரும்படி வடமாகாணத்தலைவருக்கு மனுப்பண்ணினர் அத்துடன் ஆடுமாடுகளுக்குரிய தீனிகளை உண்டாக்குவதற்காக 2000 ஏக்கர் காட்டு நிலத்தையும் குத்தகைக்குத் தரும்படி கேட்டார். வடமாகாணத் தலைவர் மேற்படியாரின் மனுவைப்பற்றித் தீர ஆலோசித்தபின்னர், அவரின் வேண்டுகோளை மறுத்துவிட்டனர் என்று கொழும்பு "டைம்ஸ்"பத்திரிகை கூறுகின்றது. மேற்படி தீவுகளிலுள்ள புற்றரைகளை மிஸ்டர் றஹிமானின் கேள்விப்படி குத்தகை கொடுத்தால், அத்தீவுகளில் வசிக்கும் மக்களின் சுயேச்சைக்குப்பங்கம் விளைப்பதாகும் என்று மாகாணத் தலைவர் காரணங் காட்டியிருக்கிறார். எனினும், மிஸ்டர் றஹிமான் மாகாணத் தலைவரின் கூற்றுடன் மாத்திரம் நிற்கமாட்டாரென்றும், அவர் இதுவிஷயமாக விவசாய மந்திரியைக் கண்டு பேசுவாரென்றும் தெரியக் கிடக்கின்றது.

## அரசனும் குரவனும்.

1-ம் பக்கத் தொடர்ச்சி.

தக்க பிரதியுபகாரம் தமியேனாற் செய்வது முடியாத காரியம். என் தனையன் அரசியற் பொறுப்பை ஏற்றிருப்பதனால் இராச்சிய விஷயமான கவலை எனக்கு இல்லையென்பது உண்மையே. ஆனால், அந்தணர் மணியே! என் உண்மை நிலைமையை அறையக் கேண்மோ! என்மனம் முன்போலவே இப்போதுஞ் சஞ்சலமாய் இருக்கின்றது. என் மனத்தை மறைப்பானென நிற்கும் அந்தகாரத்தை நீக்கும் மார்க்கம் இதுகாறும் கண்டிலேனே; பரீட்சித்து மகாராஜனின் சரித்திரத்தை அடியேனுக்கு எடுத்தோதினீர். ஓர் ரிஷியின் மைந்தனிட்ட சாபத்தின்படி அவன் இறக்க நேரிட்டபோது, பாகவதத்தை ஒருகிழமைக்கு மாத்திரம் ஓதியபின் பகவத் தெரிசனங் கண்டு தன் மரணத்தை எதிர்பார்த்தான் என்றுகூறினீர் ஆனால் அடியேன் ஒருகிழமையல்ல, இத்தனை வருஷகாலமாயும் பாகவதத்தை ஓதிவருகின்றேனே. இத்தனை வருஷ காலமாயும் நான் பகவத் தரிசனத்தில் இம்மியளவேனுங் காணவில்லையே. நான் என்செய்வேன். கல்விக்கடலே! கருணைவாரிதியே! என்மனம் சாந்தியடையாததற்குக் காரணம் இதுவே. இத்தனைவருஷகாலமாயும் உண்மைவஸ்துவாம் பகவத் தெரிசனங் காணுதேனே? அருள் பாலிக்க வேண்டும். (வரும்.)

## இந்தியச் செய்திகள்.

### விதேசித் துணிக்கடை மறிய

விதேசித் துணிக்கடை மறியல் செய்த வங்காள வாலிபர் சிறையாயினர்.

### வேலூரில் சிறையாளர் விடுத

தமிழ் நாட்டுத் தேசிய மகாசபையின் 5- சர்வாதிகாரியாய் இருந்தவரும், 6மாதச் சி தண்டனை அநுபவித்தவருமான திரு. R சுவாமிநாதன் அவர்கள் சென்றவாரம் வி யானர்.

### நீதிஸ் தலத்திற் தேசியகீதம்

சீதாபுரி நீதிஸ்தலத்தில் வழக்கு விசா நடக்கும்போது இருதொண்டர்கள் சென்று தேசிய கீதங்களைப் பாடியவராய் மறுப்புச் சம்பந்தமான துண்டுப் பத்திரங் அங்குள்ளோர்க்கு அளித்தனர். அவர்கள் வரும் சிறையாக்கப்பட்டனர்.

### கேரளநாட்டுச் சர்வாதிகாரி சிறையானர்.

கேரளநாட்டு 20வது சர்வாதிகாரிய ஸ்ரீ K. C. நம்பியார் அவர்கள் ஒரு மா கூட்டத்திற் பிரசாரணம் செய்துகின்றபோ சிறையாக்கப்பட்டார். "பம்பாய் ஹால்" எ விதேசித் துணிக்கடையை மறியல்செய்த தொண்டர்கள் சிறையாக்கப்பட்டனர்.

### ஊர்வலத் தொண்டருக்குச் சிற

கல்கத்தாவில் உள்ள மைதானத்துக்கு ஓர் ஊர்வலத்தைக் கொண்டு சென்றதற் ஸ்ரீ நிசபந்து சென் என்பவரும் இருதொ டர்களும் தலைக்கு 6 மாதக் கடுழியச் சி வாசத் தண்டனை விதிக்கப்பட்டனர் செ வாரம் ஹிஜ்லிச் சிறைக்கூட்டத்தினின்றும் சிறையாளர் விடுதலையாயினர்.

### நீதிஸ் தலத்தில் பகிஷ்கார முழக்கம்.

பொள்ளாச்சி நீதிஸ்தலத்தில் நீதிபதி நரேசையா அவர்கள் வழக்குகளை விசார புரிந்து கொண்டிருக்கையில், 3 தொண்டர் திடீரென அங்குசென்று பகிஷ்கார துண் பத்திரங்களை வழங்கி தேசியக் கீதங்களை பாடினர் உடனே அவர்கள் மூவரும் சி யாக்கப்பட்டனர்.

### மூஸ்லீம் தலைவர் சிறையானர்.

திலோபான் என்றஇடத்தில் உள்ள மகம மத சஸ்திரக் கல்லூரிப் பிரதமாசிரியரு ஜமயித்துல் உலெமாச்சபையின் சர்வாதி புமாகிய மௌலானா ஹுஸேயின் அகமத் கள் சென்றவாரம் டெல்லிசருக்குப் போ வழியில் சிறையாக்கப்பட்டார். அவரோ சேரை 14 தொண்டர்கள் சிறையாக்கப்பட் னர்.

### கள்ளுக்குடிக்க வேண்டாம் என்றவர்க்குச்சிறை.

தஞ்சாவூரைச் சேர்ந்த ஸ்ரீ வில்லிபுத் ஸ்ரீ கன்னபிரான் ஐயங்கார் அவர்கள் ம பானம் செய்யவேண்டாம் சுதேசப் பொரு களையே பாவியுங்கள் என்ற மதுபானமி துண்டுப்பிரசுரங்களைக் கடைவீதியில் தி வழங்கியதற்காக 6 மாதக் கடுழியச் சி வாசத் தண்டனையும் 100ரூபா அபாரதமு விதிக்கப்பட்டார்.

### குருடனின் தேசபக்தி.

சென்றவாரம் லட்சுமணபுரியில் "கா தினம்" மிக்க ஆனந்தமாகக் கொண்டாடப் ப டது. அங்குள்ள மைதானத்தில் மேற்ப கொண்டாட்டத்தின் போது ஒரு குருட தேசிய கீதங்களைப் பாடினன். அவனுடை தேசிய கீதம் கேட்பதற்காக நூற்றுக்கண கான மக்கள் அங்கு கூடினர். அப்போது ஒ தொண்டர் தேசியக் கொடியைக் கையிலே தியவராய்த் தோன்றிப் பிரசாரணம் நிகழ்த் னர் உடனே அருகாமையில் நின்ற பொலி அவனைச் சிறைப்படுத்தினர்.

### வங்காளத்தில் புரட்சி இயக்கம்.

ஆங்கிலப் பத்திராதிபரின் அருந்தப்பு.

வங்காள வாலிபனின் தற்கொலை.

கல்கத்தாவில் இருந்து பிரசுரமாகி, இ திய சுயராச்சியத்திற்கு மாறாகப் பாடு ப வது என்று சொல்லப்படும "ஸ்டேட்ஸ் மன்" என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகிய சேர் அல்பிரட் உவாட ஸன் என்பவர் தமது காரியாலத்திற்குச் செல்லும்போது ஓர் வங்காள வாலிபனா சுடப்பட்டார். தற்காலமாக அவர் தப் னர். அங்கு காவல்நின்ற ஓர் பொலிசா அவன் பிடிக்கப்பட்டான்; தன்நிலை அபாயகரமானது என்பதை யுணர்ந் வாலிபன் தன் சட்டைச் சாக்கிலுள் ஆயுதமாய் வைத்திருந்த நஞ்சை உட் கொண்டு உயிர் விட்டான்.

## தலைமை ஆசிரியர் தேவை.

அனலைதீவு (சதாசிவ வித்தியாசாலை) கலவன் பாடசாலைக்கொருதலைமை ஆசிரியர் தேவை. விரும்புவோர் மனேச்சரிடம் நேரில் அல்லது கடிதமூலமாய் விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,
V. CHELLAPPAH,
மானேஜர்.

(Mis 562. 11th)

---

## மலேரியா மஹாதைலம்.

## (MALARIA MAHATHYLAM)

மலேரியாவென வழங்கும் மலேச்சுரமாகிய கொடிய நோய்க்கெனப்புதிதாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டு அநேக நற்சாட்சிப்பத்திரங்கள் பெற்று விளிரும் ஓர் சிறந்த தைலம். மலேரியா உள்ள இடங்களில் வசிப்போர்களும் இக்கொடுநோயால் வருந்துவோர்களும் வேறு எவ்விதமான எண்ணெய் உபயோகியாது, எம் "மலேரியா மஹாதைலத்தை"யே முறைப்படி உபயோகித்து வந்தால் இக்கொடு நோயால் பீடிக்கப்படமாட்டார்கள். மூளைக்குளிர்ச்சியும் சுகந்தவாசனையுந்தரும். 3 வயதுப்பாலர்முதல் விருத்தாப்பியர்வரை உபயோகிக்கலாம்; பத்தியமில்லை. தைலம் பாவிக்கும்முறை தைலத்துடன் அனுப்பப்படும். பொதுஜன நன்மையைக் கருதியே விலைகுறைக்கப்பட்டது.

24 அவுன்ஸ் போத்தல் ஒன்றுவிலை ரூபா 6—00
12 ,, ,, ,, 3—50

தபாற்செலவு பிரத்தியோகம்.

அந்நியநாடுகட்குத் தபாற்செலவு உட்பட ரூ. 8-00 முற்பணமாயனுப்பவேண்டும்.

போ செல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

(H. 16 4 8—4-2 33. வி)

---

THE JAFFNA BENEFIT COMPANY.

## வட இலங்கை ஏலச்சீட்டுக் கம்பெனி.

(றெஜிஸ்தர் செய்யப்பெற்றது)
No. 211. இரண்டாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

1. மாசம் 40 ரூபா விகிதம் கட்டவேண்டிய (A) வகுப்பு 1000 ரூபாச் சீட்டின் (முதலாம் ஏலம்) முதலாம்சீட்டு 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிற்கப்படும்.

2. மாதம் 20 ரூபா விகிதம் கட்டவேண்டிய (B) வகுப்பு 500 ரூபாச் சீட்டின் (இரண்டாம் விற்பனை) முதலாம் சீட்டும் அதே வகுப்பின் இரண்டாம் தொகுதிச் சீட்டும் 1932-ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 20-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிற்கப்படும்.

3. மாதம் 10 ரூபா விகிதம் கட்டவேண்டிய (C) வகுப்பு 200 ரூபாச் சீட்டின் (2-ம் விற்பனை) முதலாம் சீட்டும் அதேவகுப்பின் 2-ம் தொகுதியும் 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்குக் கூறிவிற்கப்படும்.

4. மாதம் 5 ரூபா விகிதம் கட்டவேண்டிய (D) வகுப்பு 125 ரூபாச் சீட்டின் 2-வது சீட்டு 1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூறிவிற்கப்படும்.

5. மாதம் 100 ரூபா விகிதம் கட்டவேண்டிய எங்கள் "விசேஷ" வகுப்பு 2500 ரூபாச் சீட்டின் முதலாம் சீட்டு (முதல்விற்பனை) 1932-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி 4 மணிக்குக் கூறிவிற்கப்படும்.

இதிற் சேரவிரும்புவோர் காலதாமதம் செய்யாது சேரவும். தாங்கள் விரும்பும் சீட்டு விற்பனை நடக்குமுதல் வெள்ளிக்கிழமை 4 மணிக்கு முன் சேரவேண்டியது.

எங்கள் சீட்டுக்கள் மாதந்தோறும் நல்ல இலாபப்பங்கு கொடுப்பன மாத்திரமன்றி அங்கத்தவர்களுக்குப் பணமுட்டு நேருங்காலங்களில் பணவுதவிசெய்யவ தவாயுமிருக்கின்றன. வேறெங்கு பணத்தைச் சேமித்தாலும் இத்தகைய நன்மைகளைப் பெறமாட்டீர்கள்.

விதானங்கட்கும், மனுப்பத்திரங்கட்கும் கீழ் காணப்படும் விலாசத்திற்கெழுதுக.

S. R. இக்னேஷஸ்,
28-7-32. மானேஜர்.

---

வெளிவந்துவிட்டது.

### சைவபோதம்3-ம்புத்தகமாகவுள்ள

## திருவருட்பயன்,

ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்கள் B. A. எழுதிய விளக்கவுரையுடன், இந்தச் சைவப்பிரகாசயந்திரசாலையிற் [3-ம்பதிப்பாக] பிழையற அச்சிடப்பெற்று வெளிவந்துவிட்டது.

இது சைவவித்தியா சாலைகளிலும் கல்லூரிகளிலும் சமயபாடமாக உபயோகப்படுவது. விலைசதம் 40 (அணா 7) இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெற்றுக் கொள்ளலாம்.

---

## மலையாளம் சில்க்.

2½-வீதீ 5-நீளம் பட்டு 1-க்கு ரூ.1-8-0
ஷெடி கர்ச்சிக்கனா டசன் 1-க்கு ரூ. 15
3 வீதீ 8-நீளம் வேஷ்டி 1-க்கு ரூ.3-8-0

S. K. R, வீவிங் பாய்க்டரி,
(Y. 30.) கோட்டார், திருவிதாங்கூர்.

---



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள

## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்கமெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப்புகழ்பெற்றது மிகஇலேசானது, மலிவானது; ஒவ்வொரு ஓட்டிலும்குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே நவீனமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

(Y 29, 1 5 to 30-4-33)

---

## இதன் மேன்மையை இரசாயனன் அறிவான்.

பாவிப்பவரும்
இதன் உண்மையை அறிவாராக.

எவ்வகையான குத்து வலிகளுக்கும், உடம்பிலுள்ள உளைவுகளுக்கும் முதற்தரமான சிறந்த இந்தியசஞ்சீவி.

## 'லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்'

லிட்டில்ஸ் ஒரியண்டல் பாம்

1885-ம் ஆண்டுதொடக்கம் இந்தியாவில் இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது.

லிட்டில்ஸ் ஒறியண்டல் பாம்,
& பர்மஸியூற்றிக்கல்ஸ் லிமிட்டெட்,
தபாற்பெட்டி 67,
சென்னை.

Y, 11.2 32—10 2-33.) D

---

## அடைவுநகை விற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டக்கோச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் வல்வெட்டித்துறை ச. ஐயாத்துரை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1931-ம் ஆ சித்திரைமீ

| இல. | ௨. | ரூ. | ஊர் பெயர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 2445 | 3 | 6 | வல்வெட்டித்துறை செ அந்தோனி பொ தோடு சோடி 1 |
| 2470 | 3 | 6 | உடுப்பிட்டி சி. இராசதுரை சி வாளி சோடி 1 |
| 2479 | 3 | 10 | வல்வெட்டித்துறை வ. சங்கர நமசிவாயம் கீசி 1 |
| | வைகாசி | | |
| 2527 | 3 | 9 | வல்வெட்டித்துறை ச. தங்கம் பொ தோடு சோடி 1, மோதிரம் சோடி 1 |
| 2555 | 4 | 15 | ,, ச. மாரிமுத்து ஓப்பின் தோடு சோடி 1 |
| | ஆனி | | |
| 2641 | 3 | 10 | உடுப்பிட்டி சி. இராசதுரை கைச்சங்கிலி 1 |
| 2648 | 4 | 8 | தெருடாவில் மு. ஐயாத்துரை இமிற் தோடு சோடி 1 |
| | ஆடி | | |
| 2694 | 3 | 7 | வல்வெட்டித்துறை க வண்ணமணி சி கடுக்கன் சோடி 1 |
| 2699 | 4 | 65 | ,, ச. மாணிக்கம் பதக்கமுள்ள அட்டியல் 1 |
| 2716 | 4 | 15 | ,, ~ சிவக்கொழுந்து இமிற் தோடு சோடி 1 |
| 2736 | 4 | 40 | ,, சி வடிவேலு மு அட்டியல் 1 |
| 2748 | 3 | 7 | கம்பாமூலை ஆ. வேலுப்பிள்ளை இமிற்தோடு சோடி 1 |
| | ஆவணி | | |
| 2771 | 3 | 7 | வல்வெட்டித்துறை சி. தங்கம்மா பொ தோடு சோடி 1 |

விற்பனவு.—ஆங்கீரசஞூ ஆவணிமீ எ-ம் திகதிக்குச் சரியான (22-8-32) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டதை பிறநீங்கலாக மிகுதி ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

V. M சந்தசாமி,
வெர்தீஸ்மேஸ்த்தர்.

Mis 559 8, 11)

---

## கவுண்மேந்துக்

கொந்திருத்துக்குக் கொடுபடும்

## கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம், 14 இஞ்சுப்பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங் கசியாது; அண்டப்பார்த்தாப்போலக் கூரையில் அடுக்கலாம். பாரக்குறைவு, பெலனதிகம்; கல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

பூ, சிங்கத்தலை, மயிலிறகு விசிறி, பூச்செடி, கலசமுடி, கோபுரமுடி முதலிய அழகான முகட்டோடுகளும், கண்ணாடி ஓடு, காற்றோடு, விசாலமான வெளிச்ச ஓடு, அலங்காரமான சிறுதூண் கல்லுகளும, தழிவிசைக் கல்லுகளும்.

யாழ்ப்பாண நகர், கிட்டங்கித்தெரு
**316-ம் நம்பர் ஓட்டுச்சாலையிற்**
பெற்றுக்கொள்ளலாம்.

Y 28 31/5.

---

### இலங்கை ஆயுர்வேத

## ரசாயன அவுஷத தொழிற்சாலை லிமிட்டெட் யாழ்ப்பாணம், இலங்கை.

(இலங்கைச் சட்டப்படி றெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்டது.)

## விளம்பரம்.

மூலதனம்:—ஒரு லக்ஷ ரூபா (100,000)

பத்து (10) ரூபா விலையுள்ள
பதினாயிரம் (10,000) பங்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரு பங்கிற்கதிகம் எடுப்பவர்கள் மனுப்பத்திரத்துடன் ஒவ்வொரு பங்கின்பேரிலும் 2 ரூபா 50 சதமும், பின் பங்கு அங்கீகரிக்கப்பட்டவுடன் பங்கின்பேரில் 2 ரூபா 50 சதமும், பின் மாதவீதம் 2 ரூபா 50 சதமும் கட்டிவரவேண்டும்.

ஒரு பங்குமட்டும் எடுப்பவர்கள் முழுத்தொகையையும் மனுவுடன் அனுப்பவேண்டும்.

## பங்குகள் இப்பொழுது விற்கப்படுகின்றன.

காலதாமதமின்றி உடன்மனுச்செய்து
உங்கட்குத் தேவையான பங்குகளை
வாங்கிக்கொள்ளுங்கள்

இன்னும் ஒருமாசத்திற்குள் பங்குகள் எல்லாம் விற்றுவிடும்.

(Y. 25. 4-3—7-2-33., [வி]

## வல்லை வெளியிற் சிங்களப் பெண்ணின் கொலை.

பிந்திய விசாரணை.

சென்ற செவ்வாய்க்கிழமை (9-8-32) வல்லைவெளியிற் சிங்களப் பெண்ணின் கொலை சம்பந்தமான விசாரணை மீண்டும் ஆரம்பமாயது. மிஸ்டர் சைமன் ரொட்றிகோ அவர்களே விசாரணை புரிந்தார். முன்போலவே நியாயவாதிகள் எதிரிகளுக்காக ஏற்பட்டனர். விசாரணை ஆரம்பமாயதும் முன்னர்ச் சாட்சியம் கூறிய மோட்டார்ரதச் சாரதி முருகேசு மீண்டும் விசாரணை செய்யப்பட்டான். அவன் தான் முன்னர்ச் சில விஷயங்களைக் கூறமறந்துவிட்டதாகக் கூறினன். அவன் கொடுத்த சாட்சியத்தின் சாரம் வருமாறு:

"என்னைப்பாசையூருக்குவரும்படி ஒரு ஆள் இடம் எதிரிகள் கூறியனுப்பினார்கள். நான் அங்கு போனேன். அங்கு மூன்றும் எதிரியாகிய கணபதியைக் கண்டேன். முதலாம் எதிரியும் அங்கு நின்றான். அவன் என்னைநோக்கி, நீ அன்று "பயஸ்கோப்" படக்காட்சிக்குச் செல்லும்போது என்னுடைய சாய்ப்பினுள் ஒரு பெண்ணைக் கண்டாயே, அவளை உனக்குத் தெரியுமா? என்று வினவினன். அந்தப் பெண்ணைத்தான் வல்லைக்குள் போட்டது என்றும் அவன் எனக்குக் கூறினன். நான் அப்போது அவனைப் பார்த்து, "அவளுக்கு எப்படி மரணம் சம்பவித்தது" என்று கேட்க, அவன் தனக்கு அதைப்பற்றித் தெரியாதென்றும், 2-ம் 3-ம் எதிரிகள் அடுத்த நாள் இரவு தன்னிடம் வந்து, அந்தப் பெண்ணோடு சிறிது சம்பாஷிக்க உத்தரவு தரவேண்டுமென்று தன்னைக் கேட்டார்கள் என்றும், பெண்ணுக்குப் பிரியமானால் நீங்கள் உங்கள் விருப்பத்தைப் பூர்த்தியாக்கலாம் என்று அவர்களுக்குத் தான் கூறினன் என்றும் எனக்குச் சொன்னன். அடுத்தநாட் காலை பார்த்தபோது அந்தப் பெண் பிணமாயிருப்பதைத் தான் கண்டதாகவும், இந்த 2-ம் 3-ம் எதிரிகளாலேயே தனக்கு இவையெல்லாம் நேர்ந்தனவென்றும் ஞானமுத்தன் எனக்குக் கூறினன்.

"1-ம் எதிரியாகிய ஞானமுத்தன் என்னைச் சிறிது தூரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய், இவை விஷயமாக என்னோடு கலந்து பேசினன். கடைசிவரைக்கும் இவைகளைப்பற்றி ஒருவருக்கும் கூறாதேயென்று அவன் என்னை வேண்டிக்கொண்டான். அப்போது 2-ம் எதிரியாகிய இளையவன் முதலாம் எதிரியாகிய ஞானமுத்தனை நோக்கி "நீ ஏன் மினைக்கெட்டு இவ்வளவு நேரமாக இவனைக் கெஞ்சுகிறாய்?" என்றான். பின்னர் ஞானமுத்தன் இவைகளை ஒருவருக்கும் வெளியிடவேண்டாம் என்று வேண்டிக்கொண்டு என்னைப் போவென்று விடைதந்தான்.

நீதிபதி: அந்தப் பிரேதத்துடன் எத்தனை பேர் சென்றீர்கள்?

முருகேசு: நாங்கள் நால்வருந்தான்.

நீதிபதி: யார் அந்த நால்வரும்?

முருகேசு: இந்த 3 எதிரிகளும் நானும்.

இதன்பின் ஷெ சாட்சி மாகாணப் பொலிஸ் தலைவரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டான். அப்போது அவன் கூறியதன் சாரம்:

"நியாயதுரந்தரர் ஸ்ரீ மாசிலாமணி அவர்களுடன், சென்ற திங்கட்கிழமை யான் பொலிஸ் நீதிபதியின் விடுதிக்குச் சென்றேன். என்னை வெளியே நிற்கச்சொல்லிவிட்டு ஸ்ரீ மாசிலாமணியவர்கள் உள்ளே சென்றனர். சிறிதுநேரத்தின் பின் அவர் வெளியேவந்து என்னையும் உள்ளே வரும்படி கூறினர். நான் கடைசியாகச் சாட்சியம் கூறியநாட்தொடங்கி சென்ற திங்கட்கிழமைவரைக்கும் மறைவாகவே வசித்து வந்திருக்கிறேன். அன்று நான் சாட்சியம் கூறியபோது சிலவிஷயங்களைக் கூற மறந்துவிட்டேன். நேற்றுத்தான் அவைகள் என் ஞாபகத்திற்கு வந்தன. அவற்றை வெளியிடவேண்டுமென நான் விரும்பினேன். ஒன்றையும் வெளியிடவேண்டாமென எதிரிகள் எனக்குக் கூறியிருந்தனர். எதிரிகள் தத்தம் வாக்குமூலங்களைக் கொடுக்கும்போது யான் நீதிஸ்தலத்தில் சமுகமாய் இருக்கவில்லை. இந்த 3 எதிரிகளும் வாக்குமூலங்கள் கொடுத்தனரோ இல்லையோ என்பதை யான் முன்னர் அறியேன். பின்னர்தான் அவற்றைப்பற்றி எனக்குத் தெரியவந்தது.

போலிஸ்தலைவர்: உண்மையைக் கூறுங்கள் இந்த எதிரிகள் கொடுத்த வாக்குமூலங்களில் உள்ள பிரதான விஷயங்கள் உனக்குத் தெரிந்ததல்லவா?

சாட்சி: எனக்குத் தெரிந்ததல்ல. அவற்றைப்பற்றி இன்றுதான் அறிந்தேன். சென்ற 3-ம் தேதி தொடக்கம் 5-ம் தேதிவரைக்கும் யான் என் பிறப்பிடமாகிய தெல்லிப்பழையிலேயே வசித்தேன்.

நீதிபதி: அங்குதான் உன்னை ஞானமுத்தன் போகச் சொன்னவன்? போய் ஒளித்திருக்கச்சொன்னவன்.

சாட்சி: ஆம்.

பின்னும் சாட்சிகூறியது: "என்னையும் இந்த வழக்கிற் சம்பந்தப்படுத்தும் வண்ணம் எதிரி வாக்கு மூலம் கொடுத்திருக்கின்றானென்பதை இற்றைவரை நான் அறியவில்லை. நான் நேற்றைத்தினம் நீதிபதியின் விடுதிக்குச்சென்று என் வாய்ப்பிறப்பைக் கொடுத்தேன். எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எவ்வித பயமுமின்றிக் கூறும்படி நீதிபதி கேட்டதனாலேயே யான் நீதிபதியின் விடுதிக்குச் சென்று என் வாய்ப்பிறப்பைக் கொடுத்தேன்.

நீதிபதி: நீ இப்பொழுது கூறுகிற சாட்சியத்தினாலே 2-ம் 3-ம் எதிரிகளைக் கொலைக் குற்றவாளிகள் என்று நீயே பாவிக்கின்றாய் என்று விளங்கிக்கொள்வாயாக. இது வேஉன் சாட்சியத்தின் பயன்.

சாட்சி: 1-ம் எதிரியாகிய ஞானமுத்து எனக்குக் கூறியனவற்றை மாத்திரம் தான் நான் இங்கு கூறுகின்றேன்.

நீதிபதி: கிணற்றில் வீழ்ந்தமையினால் குறித்த சிங்களப்பெண் இறந்தாள் என்று சொல்வது பொய்யா?

சாட்சி: ஞானமுத்து அதைப்பற்றி எனக்கு ஒன்றும் கூறவில்லை.

நீதிபதி: பெண்ணின் பிரேதம் வீட்டினுள் காணப்பட்டது என்று மாத்திரம் 1-ம் எதிரி கூறினனோ?

சாட்சி: சிங்களப்பெண் பிரேதமாகக் காணப்பட்டாள் என்று மாத்திரமே கூறினன.

இரண்டாம் எதிரிக்காக ஏற்பட்ட ஸ்ரீ K. V. சின்னத்துரை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சிகூறியது:

"சென்றமுறையான்சாட்சியம்கொடுத்தபோது, ஸ்ரீ சின்னத்துரை குறுக்குவிசாரணை புரியுமுன், நீதிபதி என்னைநோக்கி, இவ்வளவுந்தானோ நீ சொல்லக் கூடியது என்றார். நான் "ஆம்" என்றேன். இப்போது கூறியதைவிட வேறொன்றும் எனக்குத் தெரியாதென்று நான் அன்று நீதிபதிக்குக் கூறினேன். நீதிபதி இன்று (9-ந் தேதி) நீதிஸ்தலத்திற்கு வரும்படி கட்டளையிட்டார்.

ஸ்ரீ சின்னத்துரை: இதற்கிடையில் நீ ஒளித்திருந்தாய். அப்படி ஒளித்துத் திரியவேண்டியன் காரணம் என்ன?

சாட்சி: இந்த எதிரிகள் விஷயத்தில் கவலையெடுப்பவர்கள் யான்தெருவாற்போகுந்தோறும் என்னை ஏசி ஏளனஞ் செய்து துன்பங்கொடுத்தனர். நான் தனியான மனிதன்: எனவே, என் சொந்தக் கிராமத்திற்போய் வசித்து, தேவையான போது நீதிஸ்தலத்திற்கு வருவது உசிதமானது எனநினைத்து அப்படியே தெல்லிப்பழையிற்போய் வசித்தேன்.

"எனக்குமாறாக, அல்லதுவேறெவர்க்குமாறாக விறுந்துகள் பிறப்பிக்கப் பெற்றிருக்கின்றன என்பது எனக்குத் தெரியவராது. நான் நேற்றையத்தினம் நீதிபதியின் விடுதிக்குச்சென்று அவருக்கு என் வாக்குமூலத்தைக் கொடுத்தேன். சாவகாசமாக என்வாய்ப்பிறப்பைக் கொடுத்தல் நல்லது என்னும் எண்ணத்தைக் கொண்டேநான் நீதிபதிக்கு என்வாய்ப்பிறப்பை அவர்விடுதியில் இருந்தபோது கொடுத்தேன் இந்த எதிரிகள் கொடுத்த வாக்குமூலங்களைப்பற்றி எனது சகோதரன் எனக்குக் கூறவில்லை. நான் கிணற்றினுள் இறங்கிச் சவத்தை எடுக்கவில்லை. துப்பறியும் பொலிசர் என்னை ஞானமுத்துவின் சாய்ப்பிற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ள கிணற்றைக் காட்டினார்கள் அது ஆழமான கிணறோ அல்லவோ என்பதைப்பற்றி நான் அறியேன். ஒரு வெள்ளிக்கிழமை யிரவிற்தான் நான் அந்தச் சவத்தை வல்லைவெளிக்குக் கொண்டுபோனேன். அன்றுகாலை ஞானமுத்துவின் சாய்ப்பிற்கு நான் போகவில்லை. அன்றுநான் செலுத்திக்கொண்டு சென்ற மோட்டர் ரதம் "செவர்லற்" ரதம் அல்ல, "கிறிஸிலர்" ரதம் என்றே இப்போதும் சொல்லுகிறேன். குறித்த வெள்ளிக்கிழமையன்று எந்நேரத்திலாயினும் பெரிய துரைராசாவை நான் சந்திக்கவில்லை

போலிஸ் அதிகாரி: (நீதிபதியை நோக்கி) இந்தச் சாட்சி இப்படி இடம்மாறிக்கொண்டு திரிகிறார்; அடுத்தமுறை இலங்கையை விட்டே ஓடிவிடவும் கூடும்; ஆனமையினால் 1000 ரூபாப் பிணையில் இவரைவெளியில் நிற்குமாறு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீதிபதி அந்தச்சாட்சியை 700 ரூபாப்பிணையில் போகும்படி விடுத்து கட்டளையிட்டபோது நீதிஸ்தலத்தில் சமுகமாயிருக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

அடுத்ததாக அச்சுவேலி உடையார் வைத்தியசுப்பிள்ளை சுப்பையா விசாரணை செய்யப்பட்டார். சில பொருள்கள் அவருக்குக் காட்டப்பட்டன. அவையாவும் குறித்த பெண்ணின் சவத்தோடு வல்லைப்பாலத்தின் கீழ்க் காணப்பட்ட பொருள்களேயென்று கூறினார். சென்ற திங்கட்கிழமையன்று வல்லைப்பாலத்தைப் பின்னரும் சோதித்தபோது கண்டெடுக்கப்பட்ட திரிகையின் அடிப்பக்கக் கல்லையும் அவர் காட்டினார்.

பொன்னுச்சாமி துரைராசாவையும், முருகேசபிள்ளை கதிரவேற்பிள்ளையையும் சிறையாக்கும்படி முன்னர் விறுந்து விடப்பட்டிருந்தது. விசாரணைத்தினம் வரையும் அவர்கள் சிறையாக்கப்படாததால் நீதிபதி அவர்களைச் சிறையாக்குவதற்காகப் பகிரங்க விறுந்து வெளியிட்டனர்.

இத்துடன் விசாரணை அடுத்தநாளாகிய புதன்கிழமைக்குத் தவணையிடப்பட்டது

### 10- தேதி நடந்த விசாரணை.

நேற்று, யாழ்ப்பாணம் பொலிஸ்நீதிஸ்தலத்தில் முன்னொருபோதுமில்லாதவாறு ஜனங்கள் எள்ளிட இடமின்றிக் குழுமியிருந்தனர். பகல் 10 மணியளவில் நீதிபதி மிஸ்டர் சைமன் றொட்றிகோ அவர்கள் நீதாசனத்தில் வந்து அமர, நான்காம் எதிரியாகிய ஸ்ரீ பொன்னுச்சாமி துரைராஜா நீதிஸ்தலத்திற்தோன்றி தம்மை ஒப்புக்கொடுத்தார். அவருக்காக நியாயவாதிகள் ஸ்ரீ S. கனகசபையும், ஸ்ரீ T. R. நல்லையாவும், நியாயதுரந்தரர் ஸ்ரீ R. R. நல்லையாவும் ஸ்ரீ V. இராமலிங்கமும் ஏற்பட்டனர். மிஸ்டர் H. A. P. சந்திரசேகரா K. C. அவர்கள் 5-ம் எதிரியாகிய ஸ்ரீ முருகேசபிள்ளை கதிரவேற்பிள்ளை (மறுநாமம் துரைராஜா) க்காக ஏற்பட்டனர். மிஸ்டர் சந்திரசேகரா நீதிபதியைநோக்கி, தம்மை ஏற்படுத்தியவராகிய 5-ம் எதிரியைத் தாம் இன்னுங்காணவில்லையெனினும், இன்னும் சிறிதுநேரத்துள் அவர் (5-ம் எதிரி) நீதிஸ்தலத்திற் தோன்றித் தம்மை ஒப்புக்கொடுப்பார் எனத் தாம் நிச்சயமாய் அறிவதால், விசாரணையைஆரம்பிக்கலாமென்று சொன்னார்.

1-ம் எதிரியாகிய ஞானமுத்துவின் சாய்ப்பிற் கருகில் உள்ள ஓர் அறையில் வசித்தவனும் மின்சாரக் கம்பனியிற் கடமைபார்த்தவனுமாகிய ஜோன் என்பவன் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். 11-30 மணியானதும் நீதிபதி மாகாணப்பொலிஸ்தலைவரை நோக்கி "5-ம் எதிரியாகிய முருகேசபிள்ளை கதிரவேற்பிள்ளை இன்னும் இங்கு வெளிப்படவில்லை; அவர் இன்று வெளிப்பட்டுத் தம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், அவரைச் சிறைப்படுத்துவதற்காக, முழுப் பொலிஸ் படையையும் நீர் அனுப்பவேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறினார்.

இவ்வாறு நீதிபதி உத்தரவிட்ட சிறிதுநேரஞ் சென்றபின் ஸ்ரீகதிரவேற்பிள்ளை அங்குதோன்றி தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் ஏறிவந்த மோட்டாரதத்தில் "ரயர்" ஒன்று பழுதடைந்துவிட்டமையினாலேயே நீதிஸ்தலத்தில் வெளிப்படக் காலதாமதமானது என்று அவர் தமது நியாயவாதி மூலமாக நீதிபதிக்கு அறிவித்தார்.

ஜோன் என்பவனின் சாட்சியத்தின் சாரம்:

1-ம் எதிரியாகிய ஞானமுத்துவின் சாய்ப்பிற்கருகிலுள்ள அறையொன்றில் நானும் இன்னும் அஞ்சாறுபேரும் வசித்துவந்தோம்; குறித்த இரவில், நானும் என் கூட்டாளிகளும் எங்கள் அறைக்கு வந்தோம். அப்போது எனது அறையில் மின்சார வெளிச்சம் எரிந்துகொண்டிருந்தது. 1-ம் எதிரியின் சாய்ப்பில் முதலாம் எதிரியும் மற்றைய இரு எதிரிகளும் (2-ம் 3-ம் எதிரிகள்) நிற்பதைக்கண்டேன். குறித்த இரவுக்கு முதனாள் இரவு முதலாம் எதிரியுடன் ஒரு சிங்களப்பெண் சாய்ப்பிற்கு வந்தாள். சிங்களப்பெண்ணுடன் வரும்போது முதலாம் எதிரி ஒரு உடுப்புப்பெட்டியையும் ("சூட்கேஸ்") கையிற்கொண்டுவந்தான். குறித்த இரவில், நானும் எனது கூட்டாளிகளும் படுத்து உறங்கினோம். இரவு 3 மணியளவில் "அம்மே" என்றொரு கூச்சலைக் கேட்டேன். அது ஒரு பெண்குரலாய் இருந்தது. அந்தச்சத்தம் அடுக்களைப்பக்கத்தில் இருந்தே வந்தது. கொஞ்சஞ்செல்ல முதலாம் எதிரியாகிய ஞானமுத்து வெளியே வந்து "ஜோன், ஜோன்" என்று என்னைக் கூப்பிட்டான். நான் அவனைநோக்கி 'இது என்ன சத்தம்' எனவினவினேன். அவன் ஏது ஒன்றுமில்லையென்றான். பின்னர் அவன் என்னை நோக்கி, 'வா, ஒருகோப்பை தேநீர் குடிப்போ'மென்றான். நான் இந்நேரத்திற் தேநீர் வாங்கமுடியாது; அத்துடன் எனக்கு எவ்விதமான பானமும் இப்போது தேவையில்லையென்றேன். ஞானமுத்து பின்னர் அடுக்களை அறைக்குட் சென்றான். நான் நித்திரைக்குச் சென்றேன். விடியற்காலை நான் நித்திரையினின்றும் எழும்பி, நானும் எனது கூட்டாளிகளும் முகங்கழுவுதற்காகக் கிணற்றுக்குப் போனோம். கிணற்றுக்கதவு பூட்டப்பட்டிருந்தது. "ஏன் கிணற்றுக்கதவு பூட்டப்பட்டிருக்கின்றது; நாங்கள் முகங்கழுவ வொண்ணாதோ" என நான் ஞானமுத்துவைக் கேட்டேன். கிணற்றைப் பாவிக்கக் கூடாது என்று அவன் கூறினன்.

"எனக்கு நாலாம் எதிரியைப் பொன்னுச்சாமியின் மகன் என்று தெரியும் அவர் முதலாம் எதிரியின் சாய்ப்பிற்கு க்ஷவரம்செய்வதற்காக நாலு ஐந்துமுறை வந்ததைக் கண்டிருக்கிறேன். அவருடைய பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது. 5-ம் எதிரியின் பெயர் துரைராசாவென்று எனக்குத் தெரியும். மின்சார வெளிச்சக்கூடுகள் ("பல்புகள்") இரவலாய்வாங்குவதற்காக நான் அவருடைய நாடகமண்டபத்திற்குச் சென்றிருக்கிறேன். 5-ம் எதிரியை ஞானமுத்துவின் சாய்ப்பிற் கண்டிருக்கிறேன். குறித்த சம்பவம் நடக்க ஒருமாதத்திற்குமுன், 5-ம் எதிரி ஞானமுத்துவின் சாய்ப்பிற்கு வந்து உள்வளவிற்குச்சென்று ஒருமாதுளங்காயைப் பிடுங்கி உடைத்து எனக்கும் ஞானமுத்துவுக்கும், வேறுசிலருக்குங்கொடுத்து தானும் தின்றார்.

ஸ்ரீ K. V. சின்னத்துரையவர்கள் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார். 4 மணியானதும் கோடுகலையுமுன், மிஸ்டர் சந்திரசேகரா நீதிபதியை நோக்கி, இந்த 4-ம் 5-ம் எதிரிகள் இந்தச் சம்பவத்திற் சம்பந்தமானவர்கள் என்பதற்கான ஆதாரங்கள் இம்மியளவேனும் இல்லை. எனவே அவர்களைப் பிணையில் விடவேண்டுமென வாதாடினார்.

நீதிபதி: நான் இது விஷயத்தைப்பற்றி நல்லாய் ஆராய்ந்திருக்கிறேன். இப்போது எதிரிகளைப் பிணையில் விடமாட்டேன்.

மிஸ்டர் சந்திரசேகரா: அப்படியானால் எதிரிகளை விளக்கமறியலுக்குக் கொண்டுபோகும்போது கைகளில் விலங்கிட்டுக் கொண்டுபோகக் கூடாது என்பதே என் விருப்பம். அவர்கள் தங்கள் சொந்த மோட்டர் ரதங்களில் மறியற்சாலைக்குப் போகும்படி உத்தரவு இடவேண்டும்.

நீதிபதி: என் சொந்த நியதியில் அப்படிப் செய்ய நான் மறுக்கமாட்டேன்.

4-30 மணியளவில் 4-ம் 5-ம் எதிரிகள் இரு மோட்டர்இரதங்களில் மறியற்கூடத்திற்குச் சென்றனர். விசாரணை இன்றைக்குத் தவணையிடப்பட்டது.

## மலாய் நாட்டிற் தொழிலின்மை.

### இலங்கையர்க்கு அங்கே இனி உத்தியோகமில்லை.

அரசினரின் எச்சரிக்கை.

ஐக்கிய மலாய் நாடுகளினதும், தொடுவாய்ப் பகுதிகளினதும் அரசினர் இலங்கை அரசினருக்கு ஒரு அறிக்கை விடுத்திருக்கிறனர். ஐக்கிய மலாய்நாடுகளிலும் தொடுவாய்ப்பகுதிகளிலும் பணமுட்டு தொழிலின்மை என்பன ஏற்பட்டுள்ளமையினால், பெருந் தொகையான இலங்கையரும் இந்தியரும் ஆங்கிருந்து தத்தம் சொந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள். எனவே, பிழைப்புத்தேடி அவ்வூர்களுக்கு வருபவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பது இயலாதகாரியமாகும் என்று அவ்வறிக்கையில் மலாய்நாட்டரசினர் குறிப்பிட்டிருக்கிறனர்.

## டி. வேலருவும் இங்கிலாந்தும்.

ஐரிஷ் குடியரசுத்தலைவர் மிஸ்டர் டி வெலரு இன்னும் சொற்பநாட்களுக்குள், நிலவரிக் கட்டண சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசினர்க்கு ஒரு இறுதிக்கடிதம் விடுப்பர் என்று ஒருசெய்தி கூறுகிறது. நிலவரிக்கட்டணத்தைப் பற்றிய தீர்ப்பைக் கூறுவதற்கான ஒரு மத்தியஸ்தச் சபை இன்னோரன்ன வெல்லைக்குட் கூடவேண்டுமென்றும், குறித்த காலவெல்லைக்குள் மத்தியஸ்தச் சபையங்கத்தவர் விஷயமாகத் தமது பிரேரணைகளை பிரிட்டிஷார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், நிலவரிக்கட்டணம் ஒருபோதும் இங்கிலாந்திற்கு அனுப்பப்படாது, ஐரிஷ் சமஸ்தானத்தின் சொந்தத்திறமாகப் பாவிக்கப்படும் என்றும் அக்கடிதத்தில் அவர் குறிப்பிடுவர். இதற்கிடையில், ஐரிஷ் குடியரசுச்சேனை, இங்கிலாந்தோடு ஐயர்லாந்து ஒருவிதமான தொடர்பும் வைத்திருக்க வொண்ணாதென்றும், இங்கிலாந்தோடு ஒருவித தொடர்புமில்லாத குடியரசு நாடாய் ஐயர்லாந்து வருவதற்கான அறிக்கையை விடும்படியும் டி வெலருவைக் கேட்கின்றனர்.

## பசளை.

—*—

ஸல்பேற் ஒப் அமோனியா
(SULPHATE OF AMMONIA)
எல்லாவிதமான பயிர்களுக்கும் வாய்ப்பானதென
அநுபவத்திற் கண்டது.

விற்பவர்கள்:

கொழும்பு,
**கொம் மேர்சல் கம்பெனி**
(லிமிட்டெட்.)
கொம்பனித்தெரு.
கொழும்பு.

(H. 15. 22-12-32. வி.)



வேண்டுஞ்சீதனப்பணத்திற்கோ, விரும்பும் இளைஞர்கல்விக்கோ,
தூண்டு கைத்தொழில் விருத்திக்கோ, சொந்தக்குடும்பாதாரத்திற்கோ
ஆண்டுகடந்த அந்திக்காலை ஆறுதலாக வாழ்வதற்கோ —

இப்பொழுதே
**புறுடென்ஷல்**
விமாக் கொம்பெனியில் சேரவும்.

இது வே,
பிரித்தானிய சாம்ராஜ்யம் முழுவதிலும்
மிகப்பெரியதான விமா ஸ்தாபனமாகும்.

பிரதானகாரியகர்த்தர்:-
DELMEGE FORSYTH & Co. Ltd.,
*Post Box 45. Colombo.*

வடபாக மேற்பார்வைக்காரர்,
க. சொர்ணலிங்கம்,
மானிப்பாய்.

(Y. 11. 19 to 31-12-32) வி.



## விளம்பரம்.

—:o:—

ஜவுளிவகையில்
**எல்லாவிதமான துணிகளும்**
பெரியகடை, காங்கேயன்துறைத்
தெருவிலுள்ள எமது
**சில்லறைவிற்பனைக் கடையில்**
தாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ஜவுளிகளும்,
**இலங்கையிற் செய்யப்பட்டன**
என்பதற்கு உத்தரவாதம்.

மற்றைய விடங்களிலும் பார்க்க எமது ஜவுளிகள்
**குணத்தாற் சிறந்தன**
**விலையாற் குறைந்தன.**

இன்னும், ஒருமுறை வந்து பார்ப்பின்
இதனுண்மை நன்கு புலப்படும்.

**இலங்கைநெசவுத்தொழிற்சாலை**
லிமிட்டெட்.

(Y 20)



ஸ்ரீ கதிர்காமம் கதிரைமலைத் தண்ணீர்ப்பந்தர்த் திருப்பணித் தர்மம்.





கதிரைமலை கடுமலையிலுள்ள முத்துமாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடத்தேறிவருகிற வெஷ தண்ணீர்ப்பந்தல் மேன் மேலும் நடந்தோங்கி வருகிறது.

குறித்த கதிரமலை உச்சியிலும் கடுமலையிலும் திருமடம் அமைத்து அடிவாரத்திற் பெருமானாற் காட்டப்பட்ட தீர்த்தக்கிணற்றிலிருந்து கடுமலை விநாயகர் கோவில்வரை குழாயிணைத்து தண்ணீர்த் தருமம் நடத்துவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

இத்தருமம் நிறைவேறும் பொருட்டு கனதனவான்களாகிய சகல புண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

உதவும் பணத்தை அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுபற்று மணியம், வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனாகிய சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசாமிப் பரதேசியார்,
கதிரைமலை

(Y. 16 9-7—8-7-32.) (வி)



## சாலாமிஸ்திரி லேகியம்.

—:O:—

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரூ, சாலாமூஸ்லி, சப்பேமூச்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முன்னி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்சவாய்வு, இருமல், காசம், பித்த காமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால்ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்

இங்ஙனம்.
க. ஆறுமுகம்பிள்ளை,
சிங்களஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.
இலங்கை.

(Y 27. 31-12-32)



## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக்கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகவியாபாரத்துக்கு
→ இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y. 17. 7 9 8-9-8


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna